பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆவணி 14, புதன்கிழமை 30.08.2017 | கதிர் 297

உங்கள் நிறுவனங்களுக்கு திறமையான பணியாளர்களை குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள

WINSTAR JOB BANK

106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

web: www.winstar jaffna.com

Fb : winstar job bank

021 320 2789

e/400

உள்ளூராட்சித் தேர்தல் டிசெம்பர் முதல் வாரம்

உரியசட்ட மூலத்தில் நாளை சபாநாயகர் ஒப்பமிடுவாராம்

கொழும்பு, ஓகஸ்ட் 30

நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்த சட்டமூலத்தில் நாளை 31ஆம் திகதி தாம் ஒப்பமிடுவார் என சபாநாயகர் அறிவித்துள்ள நிலையில் அதன் காரணமாக டிசெம்பர் முதல் வாரத்தில் நாடு முழுவதிலும் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்த வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக தேர்தல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பக்கம் 18 »

காணாமலாக்கியோரை நீதியின் முன் நிறுத்த அழுத்தம் கொடுங்கள்!

சர்வதேச சமூகத்திடம் சம்பந்தன் கோரிக்கை

கொழும்பு, ஓகஸ்ட் 30

காணாமற்போகச் செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் விடயம் தொடர்பாக இலங்கை அரசு சர்வதேசத்திற்கு வழங்கிய உறுதிமொழிகள் செயற்படுத்தப்படுகின்றமையை உறுதிசெய்யுமாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பக்கம் 18 »

மக்கள் கூட்டத்தில் இருந்து சுவிஸ்குமாரை காப்பாற்றி விடுவித்தவர் விஜயகலாவே!

நேற்று நீதிமன்ற சாட்சியத்தில் எதிரியே தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.30

"வேலணைப்பாலத்தை ஒட்டிய பகுதியில் என்னை 2015 மே மாதம் 17 ஆம் திகதி இரவு மக்கள் கூட்டத்தினர்தூணில்வைத்துத் தாக்கியபோது அங்கு வந்து, அடிக்க விடாமல் தடுத்து, என்னைக் காப்பாற்றிப் பின்னர் எனது மனைவி, தாயாரிடம் ஒப்படைத்து என்னை விடுவித்து அனுப்பிவைத்தவர் திருமதிவிஜயகலாமகேஸ்வரன்தான். அப்போது அவர் யார் என்பதும் கூட எனக்குத் தெரியாது."

பக்கம் 18 »

அளப்பு அருணாசலம்

எட்டு வருசம் கழிச்சு எட்டாத இடத்திலை எல்லோ வழக்குப்போட வேண்டிக் கிடக்கு...!

மாகாண சபைகளில் 20ஆவது திருத்த சர்ச்சை

கொழும்பு, ஓக.30

மாகாண சபையின் தேர்தல் முறைமையை மாற்றியமைக்க வழிசெய்யும் விதத்தில் தற்போதைய அரசமைப்புக்குக் கொண்டு வரப்படும் இருபதாவது திருத்தம், மாகாண சபைகளின் அவதானிப் புக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பின்னணியில்

பக்கம் 18 »

தெற்கில் தோல்வி

இருபதாவது அரசமைப்புத் திருத்த யோசனை தென்மாகாணத்தில் நேற்றுத் தோற்கடிக்கப்பட்டது.

வாக்கெடுப்பின் போது அந்த யோசனைக்கு ஆதரவாக யாரும் வாக்களிக்கவில்லை. எதிராக 27 வாக்குகள் அளிக்கப்பட்டன.

பெரும் குழப்பத்துக்கு மத்தியில் இந்த வாக்களிப்பு இடம்பெற்றது. (உ)

செங்கோலையும் கொண்டு கழிவறை நோக்கி ஓட்டம்

20ஆவது திருத்த யோசனை தென் மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்ட சமயம் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் சந்தன பிரியந்த, செங்கோலை சபையிலிருந்து எடுத்துக்கொண்டு கழிவறையை நோக்கி ஓடிச்சென்றார் என்று

பக்கம் 18 »

வடமேற்கில் திருத்தம்

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை சட்டவாக்க சபைக்கு அனுப்பி வைக்க வடமேல் மாகாணசபை தீர்மானித்துள்ளது.

வடமேல் மாகாண முதலமைச்சர் தர்மசிறி தஸநாயக்க முன்வைத்த சில திருத்தங்களின் காரணமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்

பக்கம் 18 »

கிழக்கில் ஒத்திவைப்பு

கிழக்கு மாகாண சபை இந்தத் திருத்த சட்டமூலத்தைப் பரிசீலிப்பதை நேற்றுத் திடீரென அடுத்த மாதம் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

நேற்று கிழக்கு மாகாண சபையில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தற்போதைய குழப்ப சூழலில்

பக்கம் 18 »

வடக்கிலும் தோற்கும்?

அரசமைப்பின் இருபதாவது திருத்தச் சட்டமூல யோசனை எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வில் ஆராயப்படவிருக்கின்றது. பெரும்பாலும் அன்றைய தினம் அந்த யோசனைத் திட்டம் தோற்கடிக்கப்படும் சூழ் நிலையே நிலவுகின்றது.

பக்கம் 18 »

வித்தியா கொலை வழக்கு முடிவை நெருங்குகின்றது!

இனி இருபக்கத் தொகுப்புரை 12,13ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், தேசிய மட்டத்திலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கு இறுதிக் கட்டத்தை நெருங் குகின்றது.

'ட்ரயல் – அட் – பார்' முறையில் யாழ். மேல் நீதிமன்றத்தில்தொடர்ந்துவிசாரிக்கப்பட்டு வரும் இவ் வழக்கில் வழக்குத் தொடுநர் மற்றும் எதிரித் தரப்பு சாட்சியங்கள் பெரும் பாலும் நேற்றுடன் முடிவடைந்தன.

இனி இரு தரப்பு சட்டவாதிகளும் தங்களது

பக்கம் 18 »

ஹஜ் விடுமுறையில் மாற்றமில்லை

ஹஜ் பெருநாளை எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை கொண்டாடுவது எனத் தற்போது தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் கூட –

எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஹஜ் பெருநாளுக்காக வழங்கப்பட்ட அரச விடுமுறையில் மாற்றம் இருக்காது என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

அட்டகாசம் புரிந்த யானை வன்னிக் காட்டுக்கு மீண்டது?

எனினும் பதற்ற நிலை நீடிக்கின்றது

யாழ்ப்பாணம்,ஓக.30

யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சிக் கிழக்குப் பகுதிக்குள்புகுந்துஞாயிறு இரவு முதல் வத்திராயன் முதல் மருதங்கேணி வரையான பகுதிகளில் தனது அட்டகாசத்தினால் பீதியையும் பதற்றத்தையும் ஏற்படுத்திய தனியன் யானை வந்த வழியே வன்னிக் காட்டுக்குள் பகுதிக்குத் திரும்பிவிட்டதாக

பக்கம் 18 »

இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க காங்கிரஸின் வெளிவிவகாரக் குழுப் பிரதிநிதிகளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் நேற்று முற்பகல் சந்தித்துப் பேசினார். அப்போது எடுக்கப்பட்ட படம்.

ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டு

அவர் தூதுவராக இருக்கும் பிரேஸிலில்

கொழும்பு, ஓக.30

இறுதி யுத்தத்தில் வன்னிப் படைக் கட்டளைத் தளபதியாகப் பணியாற்றியவரும் முன்னாள் இராணுவத்தளபதியும்பிரேஸிலுக்கான இலங்கைத் தூதுவருமான ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய வுக்கு எதிராக

பக்கம் 18 »

அஸ்கிரிய பீடாதிபதி இன்று யாழ்.நகருக்கு

யாழ்ப்பாணம்,ஓக.20

வடக்கே வருகை தந்துள்ள அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வண. வரக்கொட சிறிஞானரத்ன தேரர் தலைமையிலான குழுவினர் இன்று புதன் கிழமை யாழ். நகருக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

பக்கம் 18 »

வவுனியாவில் 118 நாள்களாகத் தொடர்ந்த

வடக்கு சுகாதாரத் தொண்டர்களின் போராட்டம் நேற்று முடிவுக்கு வந்தது!

சுகாதார அமைச்சர் குணசீலனின் கலந்துரையாடலை அடுத்து

யாழ்ப்பாணம், ஓக. 30

வடமாகாணசுகாதாரதொண்டர்களின் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

கடந்த15வருடகாலமாகவடமாகாண சுகாதார தொண் டர்களாக பணியாற்றிய வர்கள் தமக்கான நிரந்தர நியமனம் கோரி வவுனியா பிராந்திய சுகாதார நிலையத்திற்கு முன்பதாக 118 ஆவது நாளாக கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்.

இந்த நிலையில் நேற்று வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி குணசீலன் போராட்டம் நடைபெறும் இடத்திற்கு சென்று சுகாதார தொண் டர்களின் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது சுகாதார தொண்டர் களினால் சுகாதார அமைச்சருக்கு மகஜர் கையளிக் கப்பட்டதுடன் ஒரு மாதகால தற்காலிக அவகாசத்தின் அடிப்படையில் 118 ஆவது நாளாக நடைபெற்ற போராட்டம் நேற்று விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின் போது வட மாகாண சுகாதார அமைச்சருடன் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சிவமோகன் மற்றும் வடமா காணசபைஉறுப்பினர்ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோர் உடன் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-100)

முன்னாள் போராளிகளை அரவணைத்துப் பழக எமது சமூகத்தினர் தயக்கம் காட்டுகின்றனரா?

கலந்துரையாடலில் மாகாணசபை உறுப்பினர் சயந்தனின் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஓக. 30

புனர்வாழ்வு பெற்று சமூகத் துடன் இணைக்கப்பட்ட முன் னாள் போராளிகள் உண்மை யிலேயே சமூகத்துடன் ஒன்றி ணைக்கப்பட்டுள்ளார் களா? இன்றும் பின் தொடரப் படு கின்றார்களா? மற்றவர்கள் அவர்களுடன் அரவணைத்து பழக தயங் குகின் றார்களா? அவர்களுடைய வேலை வாய்ப்புசீராகஉள்ளதா?போன்ற கேள்விக ளுக்கு முன்னாள் போராளிகள் முகம் கொடுத்து வருகின்றனர் என வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தென்மராட்சி கலாசார மண்டபத்தில் போராளிகளின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாட லிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளின் வாழ்க்கைத் தரத்தினை ஒரு நிலையான இடத்திற்குக் கொண்டு செல்வதற்கு நாம் அவர்களுடன் கலந்துரை யாடினார் இனிவரும் காலங் களில் முறையான நடவடிக்கை எடுப்போம்.

பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் காணா மல் போனோர் விவரங்களை பிரதேச செயலகத்தின் ஊடாக பெற்றுள்ளோம்.

போராளிகளின்விவரங்களை திரட்டும் போது ஏன் எதற்கு போன்ற தயக்கங்கள் காணப் படுகின்றன.ஆகவே, நாம் முதலில் தாமாக முன்வந்த முன்னாள் போராளிகளையே கலந்துரையாடலுக்கு அழைத் துள்ளோம்.

புனர்வாழ்வு பெறாத முன் னாள் போராளிகளுடைய விவரங்களை பெற்றுக் கொள் வதிலும் அவர்களை கலந்து ரையாடலுக்கு அழைப்பதிலும் அவர்களுடைய பாதுகாப்பு தொடர்பில் சிக்கல் நிலை ஏற்படக்கூடும். ஆகவே அவர் களைதனியாக அழைத்து கலந் துரையாடி அவர்களுடைய வாழ்க்கை முறையை உயர்த்த நடவடிக்கை எடுப்போம்.

இந்தக்கூட்டத்தில்இருக்கும் முன்னாள் போராளிகளை விட இரு மடங்கானவர்கள் தென் மராட்சி சமூகத்தில் உள்ளனர். அவர்களை இனம் காண முடியாதுள்ளது.தென்மராட் சியில் 220 முன்னாள் போராளிகள் பதிவாகியுள்ளனர்.

அவர்களை இனங்கண்டு நிரந்தர வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய விடயங்கள் பற்றி கலந்துரையாட கடமைப்பட் டுள்ளோம்.இனி போடும் திட்டங்கள் எல்லாம் நீடித்து நிலைக்கக்கூடிய நிரந்தர வரு மானத்தை ஈட்டித் தரக்கூடி யதாக இருக்க வேண்டும்.

சங்கங்கள் மற்றும் தொழிற்ச ாலைகள்அமைத்துஅதனூடாக சமூகத்தை முன்னேற்ற முடியும். அத்துடன் முன்னாள் போராளிகள் கல்வி கற்கும் காலங்களில் யுத்த நிலமை காரணமாக ஆயுதம் ஏந்தியதால் கற்க முடியாத சூழல் ஏற்பட்டது. அந்த வடு இன்று அவர்கள் அரசாங்க வேலை மற்றும் தனியார் வேலைக்குச் செல்வதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

ஆகவே முன்னாள் போரா ளிகளை விசேடதகுதி உடைய வர்களாக பிரகடனப்படுத்தி அரச சேவைக்கு உள்ளீர்க்க வேண்டும்.

ஏனையவர்களுடன் அவர் களை ஒப்பிடக்கூடாது.அர சைத் தூண்டும்வகையில்எமது தமிழ் தலைவர்கள் வேலைத் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் தெரி வித்துள்ளார். (க- 21)

அமரர் தர்மரின் நினைவஞ்சலி நிகழ்வு சனியன்று தாவடி நினைவுத் தூபியில்!

இணுவில் ஓக.30

முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்ம லிங்கத்தின்32ஆம்ஆண்டு நிறைவு நாளான எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு, தாவடி யிலுள்ள அன்னாரின் நினைவுத் தூபியில் நினைவஞ்சலி நிகழ்வு இடம்பெறும்.

நவாலியூர் க.கௌரி காந்தன் தலைமையில் நடைபெறும்இந்தநிகழ்வில் பேராசிரியர் சி.க.சிற்றம் பலம், வைத்தியர் அமிர் தலிங்கம் பகீரதன் (ரவி) ஆகியோர் சிறப்பு அஞ்ச லியுரை ஆற்றுவர்.

அமரரின் புத்திரனும் நாடாளுமன்ற உறுப்பி னருமான தர்மலிங்கம் சித் தார்த்தன் நன்றியுரையாற் றுவார்.

இதேவேளை, அன் றையதினம் நண்பகல் 12 மணிக்கு ஏழாலை கண் ணகை அம்மன் ஆலய மண்டபத்தில் அன்ன தானமும் இடம்பெறும்.

சகல நிகழ்வுகளிலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அமரர் வி.தர்மலிங்கம் நினைவுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (இ)

இலங்கை வான்பரப்பில் நுழைந்தது இந்திய கடற்படையின் விமானம்!

கொழும்பு,ஓக. 30

இந்தியக் கடற்படையின் நீண்டதூரகண்காணிப்பு விமா னம் இலங்கை எல்லைக் குள் நுழைந்து தேடுதல்களை நடத்தியது என இந்தியக் கடற்படை, தகவல் வெளியிட் டுள்ளது.

கேரளாவின் கொல்லம் கடற்பகுதியில் கடந்த சனிக் கிழமை இந்திய மீன்பிடிப் படகு ஒன்றை மோதிவிட்டு கப்பல் ஒன்று தப்பிச் சென் றிருந்தது.

தென்திசையில்தப்பிச்சென்ற அந்தக் கப்பல் ஹொங் கொங் கில் பதிவு செய்யப்பட்ட Ksl Ang Yang என்ற கப்பலாக இருக்கலாம் என்று இந்திய கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கொச்சியில் இருந்து 400 கடல் மைல் தொலைவில் என்பதால், டோனியர் விமா னங்களின்எல்லைக்குஅப்பாற் பட்டது.

எனவே, நீண்டதூர கண் காணிப்பு விமானம் ஒன்று தேடுதலுக்காக அனுப்பப்பட் டது.

இலங்கை வான்பரப்பில் நுழைந்து தேடுதல்கள் நடத் தப்பட்டன. இதற்காக இலங்கை அதிகாரிகளிடம் அனுமதி பெறப்பட்டது. என்றும் இந்திய கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள் ளன.

யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் அழைப்பை ஏற்று அஸ்கிரிய பீடாதிபதி நேற்று முன்தினம் யாழ்.வந்தார். நேற்று வடக்கு படைகளின் தளபதிகளுடனும் ஏனைய படைகளின் உயர் அதிகாரிகளுடனும் அஸ்கிரிய பீடாதிபதி கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். அவர் வடக்கில் பல்வேறு இடங்களுக்கும் விஜயம் செய்தார். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

செய்தவை அனைத்திலுமே கொள்ளை; இதுவே ராஜபக்ஷவினரின் சாதனை!

இப்படிச் சொல்கிறார் சந்திரிகா குமாரதுங்க

கொழும்பு, ஓக.30

"கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்காசுதந்திரக்கட்சியை நாம் தோற்கடிக்கவில்லை. ராஜபக்ஷ அரசாங்கத்தையே தோற்கடித்தோம்"

– இவ்வாறு, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

மாவனெல்லையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் அந்த உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

ராஜபக்ஷ அரசாங்கத்தை பதவியில் இருந்து அகற்றும் நடவடிக்கையை இரகசியமாக மேற்கொள்ளாமல் வெளிப்படையாக மேற்கொண்டிருந்தால், தற்போது நான் 6 அடி நிலத்தின் கீழேயே இருப்பேன்.

ராஜபக்ஷ வெளியில் இருந்து கொண்டு, கொள்ளையடிக்கும் பேராசையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அழிக்க முயற்சித்து வருகிறார்.

நுரைச்சோலை மின்சார நிலையத்தை நிர்மாணிக்க மஹிந்த ராஜபக்ஷ ஒரு நிறுவனத்தை அழைத்திருந்தார், ஆயிரத்து 500 கோடி ரூபா தனக்கு வேண்டும் என அந்த நிறுவனத்திடம் கூறியிருந்தார். செய்த அனைத்திலும் கொள்ளையடித்தனர்.

கட்சியின் கிளைகளையும் சங்கங்களையும் ஏற்படுத்த இடமளிக்கவில்லை. இது குறித்து தற்போதைய ஜனாதிபதியிடம் கேட்டேன், நீங்கள் தானே கட்சியின் பொதுச்செயலாளராக இருந்தீர்கள், ஏன் கட்சியின் கிளைகளையும், சங்கங்களையும் ஏற்படுத்தவில்லை என்று வினவினேன்.

பஸில் ராஜபக்ஷ கட்சியின் தலைமையகத்தைக் கைப்பற்றிக் கொண்டார் எனவும் தன்னால் எதனையும் செய்ய முடியாமல் போனது எனவும் ஜனாதிபதி கூறினார்.

இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத நிலையில் கிளைகளை அமைத்து கட்சியின் மறுசீரமைப்புப் பணிகளை ஆரம்பித்த போது, மஹிந்த ராஜபக்ஷ தன்னை அழைத்து ஆபாச வார்த்தைகளால் திட்டினார் எனவும் ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன என்னிடம் கூறினார்.

ராஜபக்ஷவினர் கட்சியை அழிக்கப் பார்த்தனர். அவரது குடும்பத்தில் எவரும் 9 ஆம் வகுப்புக்கு மேல் சித்தி பெறவில்லை.

அவரது மூன்று பிள்ளைகளும் அப்படித்தான். சட்டப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார்கள் எனக் கூறுவது பொய். இதனால், கல்வியின் பெறுமதி அவர்களுக்கு தெரியாது. – எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

(ம)

மண்டைதீவுக் கடலில் உயிரிழந்த மாணவரின் சடலம் பெற்றோரிடம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். மண்டைதீவு சிறுத்தீவு கடலில் படகு கவிழ்ந்ததில் உயிரிழந்த 6 மாணவர்களின் சடலங்களும் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. உயிரிழந்த மாணவர்கள் நீரில் மூழ்கியதனாலேயே உயிரிழந்தனர் என சட்ட வைத்திய அதிகாரியினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அவர்கள் ஏதாவது அருந்தினார்களா என்பதைக் கண்டறிவதற்காக உடற்கூறுகள் எடுத்து கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி சம்பவம் தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

உயிரிழந்த மாணவர்களின் சடலங்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைய மாணவர்கள் நீரில் மூழ்கியமையினாலேயே உயிரிழந்துள்ளனர் என்பது சட்டவைத்திய அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் உயிரிழந்த மாணவர்கள் இறப்பதற்கு முன்னர் எதாவது அருந்தியுள்ளார்களா என்பதை அறிந்து கொள்வதற்காக உடல்கூற்றுமாதிரிகள் எடுக்கப்பட்டு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னரே அது தொடர்பாகக் கூற முடியும். – என்றார். (ம)

யாழில் அமிரின் பிறந்தநாள்: இரா. சம்பந்தன் நினைவுரை

ஞாயிறன்று பொது நூலகக் கேட்போர் கூடத்தில்

யாழ்ப்பாணம், ஓக.30

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமரர் அமிர்தலிங்கத்தின் 90 ஆவது பிறந்தநாள் நினைவுப் பேருரை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் வண. கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் பிரதம விருந்திராகக் கலந்துகொண்டு உரையாற்றுவார். சிறப்புவிருந்தினராக சட்டத்தரணி கனக.மனோகரன் (கனடா) கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், மௌலவி சுல்தான் அப்துல் காதர், றோசன் (மதனி) ஆகியோர் ஆசியுரைகளை நிகழ்த்துவர். இங்கு 'இலட்சிய இதயங்களோடு' என்ற நூல் வெளியீடும் இடம் பெறும்.

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

(ம)

ஊவா மாகாண சபை உறுப்பினர் மரணம்

ஊவா மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் மாகாண சபையின் அமைச்சருமான கித்சிறி சேனரத் பண்டார அத்தநாயக்க நேற்றுக் காலமானார்.

நோய்வாய்பட்டு கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

51 வயதுடைய இவர் ஊவா மாகாணத்தில் மாகாண சபை உறுப்பினராக கடந்த 1999 ஆம் ஆண்டு முதல் முறையாக தெரிவு செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

தாயகத்தில் இன்று முன்னெடுக்கப்படவுள்ள போராட்டங்களில் இணைந்துகொள்ளுங்கள்

காணாமற்போனோரின் உறவுகள் கோரிக்கை

சர்வதேசகாணாமல்போனோர் தினமான இன்று தாய கத்தில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களில் எதுவித பேத மும் இன்றி அனைவரையும்கலந்துகொண்டு தமக்கு ஆதரவு வழங்குமாறு, முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக இன்று காலை 9.30 மணிக்கு கவனயீர்ப்பு போராட்டமொன்று இடம் பெறவுள்ளது. இப்போராட்டத்தில் அனைவரும் கலந்துகொண்டு ஆதரவளிக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மேலும் நேற்று தெரிவிக்கையில்,

நாளை (இன்று) சர்வதேச காணாமல்போனோர் தினமாகும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் அந்தந்த மாவட்டங்களில் இடம் பெறவுள்ளது. அனைத்து பொது மக்கள், அமைப்புகள், அரசியல் வாதிகளையும் குறித்த போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இதேவேளை, சர்வதேச நாடுகளைச்சேர்ந்தஎமதுபுலம்பெயர் உறவுகளும், எமக்காக ஆதரவு தெரிவிக்கும் வகையில், போராட்டங்களைமுன்னெடுக்கவேண்டும் எனக் கோருகின்றோம்.

(ம–81)

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

காணாமற்போனோர் விடயத்தில் களப்பணியாற்றும் அமைப்புகள்

தமது நெஞ்சுக்கு இனிய நெருங்கிய உறவுகள் வருவார்கள், வருவார்கள் என இங்கு நம் மத்தியில் பல்லாயிரக் கணக்கானோர் ஏக்கத்துடன் காத்திருக்கும் அவலம் நம் தேசத்தில் தொடர்கதையாக நீளுகிறது.

இவ்வாறு காணாமற்போனோர் குறித்து உலகளாவிய ரீதியில் சிந்தித்து, அனுஷ்டிக்கும் நாள் இன்றாகும்.

அடையாளம் தெரியாத இடங்களில், வெளித் தகவல்களின்றி தடுத்து வைக்கப்பட்டோர், பல்வேறு சட்டங்களின்படி அல்லது சட்டத்துக்கு மாறாகக் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமற் போகச் செய்யப்பட்டவர்கள் போன்றோர் தொடர்பில் அறிந்து கொள்வதற்காகப் பிரகடனப்படுத்தப்பட்ட சர்வதேச தினமே இது வாகும்.

கைது செய்யப்பட்டு பின்னர் காணாமற்போனோருக்கான உறவினர்களினால் கொஸ்டாரிக்காவில் 1981இல் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பே இந்த சர்வதேச தினப் பிரகடனத்துக்கான யோசனையை முன்வைத்தது. அதனடிப்படையில் இந்தத் தினம் அறிவிக்கப்பட்டு அனுஷ்டிக்கப்படுகின்றது.

காணாமற்போன மக்களின் பாதுகாப்பிற்கான கொள்கைப் பிரகடனம் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் 1992 ஆம் ஆண்டு டிசெம்பர் 18 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

மனித உரிமை மீறல்களின் வரிசையில் மிக மோசமான குற்றமாகக் கருதப்படுவது வலிந்து காணாமற் போகச்செய்தலாகும்.

ஆனால், அது இலங்கையைப் பொறுத்தவரை ஒருதண்டனைக்கான குற்றமாக இன்னும் முழு அளவில் வரையறை செய்யப் படவில்லை.

இலங்கைத் தீவில் இரத்த ஆறு ஓடிய மோசமான இன யுத்தப் பேரழிவின் பின்னர் - பல்லாயிரக்கணக்கானோர் மனித மாண்புகளுக்கும், விழுமியங்களுக்கும் மாறான வகையில் வலிந்து காணாமலாக்கப்பட்ட கொடூரம் அரங்கேறி பல ஆண்டுகளுக்குப் பின்னர் - இப்போதுதான் காணாமலாக்கப்படுதலை குற்றமாக்கும் சட்ட ஏற்பாடுகள் குறித்து ஆராயப்படுகின்றது. அது தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சர்வதேச ரீதியில் யுத்தப் பூமிகளிலும், இனப் பிணக்குகள், கலவரங்கள், புரட்சிகள் இடம்பெறும் இடங்களிலும் பெரும் எண்ணிக்கையில் காணாமற்போகச் செய்தல் என்ற கொடூரம் அரங்கேறுவது வழமை.

இந்த விடயத்தை சர்வதேச ரீதியில் கையாளும் பல அமைப்புகள் உள்ளன.

குறிப்பாக சர்வதேச ரீதியில் அனைத்து மனித உரிமை அமைப்புகளும் இவ்வாறு வலிந்து காணாமற்போகச் செய்தல் குறித்த விடயத்தை மிக மோசமான மனித உரிமை மீறலாகக் கருதி அதில் அதீத கவனம் செலுத்தி வருகின்றன என்பது அவதானிக்கப்பட வேண்டிய யதார்த்தமாகும்.

எனினும் இந்த விவகாரத்தில் சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணையாளர் அலுவலகம், செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு என்பன இவற்றுக்கு மத்தியில் காத்திரமான பங்களிப்பை வழங்குகின்றன.

சர்வதேச மன்னிப்புச் சபையும் அது போன்ற மனித உரிமைகள் அமைப்புகளும், வலிந்து காணாமற்போகச் செய்யப்படும் சம்பவங்களில் பாதிக்கப்படுவோருக்காகவும், பாதிப்பை ஏற்படுத்துகின்ற தரப்புகளுக்கு எதிராகவும் குரல் எழுப்புகின்றன.

மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணையாளர் அலுவலகம், சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு இடையில் ஓர் அதிகாரத் தரப்பாகச் செயற்பட்டு உண்மைகளைக் கண்டறியவும், நீதியை நிலைநாட்டச் செய்யவும், நாடுகளுக்கு இடையில் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்தைக் கொண்ட ஒரு கட்டமைப்பாகச் செயற்படுகின்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் செயற்பாடோ இவை எல்லாவற்றையும் விட மிக வித்தியாசமானதாகும்.

பிணக்குகளில் - மோதல்களில் - ஈடுபட்ட தரப்புகளுக்கு மத்தியில் மத்தியஸ்தப் பணி வகித்து, பாதிக்கப்பட்ட மக்களின் - கைதியின் - தடுப்புக் காவலில் இருப்போரின் - நலனைப் பேணுவதில் இந்தச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மிக மிக முக்கியமான பணிகளை ஆற்றுகின்றது.

தம் பணியை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்காக இந்தச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பல விடயங்களில் பொது முகத்துக்கு வருவதில்லை. திட்டவட்டமான - வெளிப்படையான - அறிவிப்புகளை வெளியிடுவதும் குறைவு.

தனது காரியங்களைச் சாதிப்பதாயின் பக்கச் சார்போ, பகட்டு ஆரவாரங்களோ செய்யாமல் செயற்பட வேண்டும், தீர்ப்புக் கூறும் பணி தன்னுடையதல்ல என்பதைப் புரிந்து பணியாற்ற வேண்டும், மோதுப்படும் தரப்புகளுக்கு மத்தியில் தானும் முரண்படும் ஒரு தரப்பாக இல்லாமல் காரியத்தைக் கொண்டு நடத்த வேண்டும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு நன்கு தெரியும். அதனால்தான் அது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளிப்படையாகச் செயற்படுவதாகக் காட்டிக் கொண்டு, மோதும் தரப்புகளுக்கு மத்தியில் ஊடுறுத்துச் சென்று பணியாற்றுகின்றது.

வவுனியா விவசாயப் பண்ணையில் நேற்று 'வயல் விழா' நிகழ்வுகள்!

வவுனியா, ஓக.30

வவுனியா முருகனூர் விவசாயப் பண்ணையில் நேற்று 'வயல்விழா' விவசாய பண்ணை முகாமையாளர் பி.கஜதீபன் தலைமையில் நடைபெற்றது.

விவசாயத்தில் கிருமி நாசினிகளைப் பயன்படுத்தாமல் சேதனப் பசளைகளை பயன்படுத்தி எவ்வாறு விவசாயம் செய்வது போன்ற செயல் முறைகளும், தூவல் நீர்ப்பாசனத்தின் மூலம் விவசாயம் செய்யும் முறைகள், நீர் முகாமைத்துவம், ஏற்றுமதி பயிர்ச் செய்கைகள், வறட்சி காலத்தில் விவசாயம் செய்யும் முறைமை போன்ற விடயங்களும் விளக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்த விருந்தினர்களுக்கு விவசாயப் பண்ணையில் பயிரிடப்பட்டிருக்கும் பயிர்கள் மற்றும் அவற்றின் வளர்ப்பு முறைகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர் கூறியவை வருமாறு:-

விவசாயிகள் இரசாயனப்பசகளைப் பயன்படுத்துவதை விடுத்து மாட்டின் மூலம் கிடைக்கும் சேதனப் பசளைகளை பயன்படுத்த முன்வர வேண்டும்.

இரசாயனப் பொருள்களை விவசாயத்திற்கு பயன்படுத்துவதன் காரணமாகவே சிறுநீரக நோய் அதிகரித்து செல்கின்றது.

குரக்கன், சாமை போன்ற பயிர்களை இன்று விவசாயிகள் பயிரிடுவதில்லை. அதன் காரணமாக அநேகருக்கு சர்க்கரை வியாதி ஏற்பட்டுள்ளது. உணவு முறைகளை அறிந்து கொள்ள மக்கள் முயற்சிப்பதில்லை.

90 வயது வரை வாழ்ந்த எமது மக்கள் 45 அல் லது 50 வயதில் நோய்வாய்ப் பட்டு இறந்து விடுகிறார்கள்.

நீர் முகாமைத்துவத்தை எமது மூதாதையர்கள் இந்த உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளார்கள். வானத்திலிருந்து விழும் ஒரு துளி நீரைக்கூட கடலில் சென்று கலக்க அனுமதிக்க மாட்டேன் என்று சொன்ன பராக்கிரமபாகுவின் வார்த்தை ஐக்கிய நாடுகள் சபையில் பொறிக்கப்பட்டுள்ளது - எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், மா.தியாகராஜா, இ.இந்திரராசா, மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், பிரதி விவசாயப் பணிப்பாளர் தே.யோகேஸ்வரன், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

2020 இல் ஆட்சியமைக்க தயாராகின்றதாம் ஜே.வி.பி.!

எதிர்வரும் 2020ஆம் ஆண்டில் ஆட்சி பொறுப்பை ஏற்பதற்கு தயாரான நிலையில் இருக்கிறோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதற்கான வேலைத்திட்டங்களை தமது முன்னணி உருவாக்கி வருகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

கேகாலை - மாவனெல்லை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, அமெரிக்காவுடனான பாதுகாப்பு உடன்படிக்கையை கையெழுத்திடக் கூடாது என மக்கள் விடு தலை முன்னணியின் நாடாளு மன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் வலியுறுத்தியுள்ளார்.

மருதானையில் துப்பாக்கிச் சூடு; ஓட்டோவில் பயணித்த இருவர் காயம்

மருதானை, மாளிகாவத்தையில் நேற்று துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் இந்த துப்பாக்கிய பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெ வித்துள்ளனர்.

இந்த அனர்த்தம் காரணமாக ஓட்டோவில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்துள்ளவர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணவர்தன தெரிவித்துள்ளார்.

துப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்காகியுள்ளவர்கள் 20 மற்றும் 26 வயதான இளைஞர்கள் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதேச செயலாளர் இருவருக்கு உடனடி இடமாற்றம்!

கிளிநொச்சி, ஓக. 30

கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டு பிரதேச செயலாளர்களுக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது,

பொதுச் சேவை ஆணைக் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் இரண்டு பிரதேச செயலாளர்களுக்கும் தொலைநகல் மூலம் நேற்று முன்தினம் பிற்பகல் இடமாற்றக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

கட்சித் தலைமைப்பீடத்தினரால் உறுப்பினர்கள் அவமரியாதை!

வட மாகாணசபை உறுப்பினர் ம.தியாகராசா தெரிவிப்பு

வவுனியா, ஓக. 30

கட்சி உறுப்பினர்களை கட்சியின் தலைமைபீடத்தினர் அவமரியாதை செய்வதை நிறுத்த வேண்டும் என வட மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போதே இவ்வாறு கூறியுள்ளார். இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த வட மாகாணசபையில் ஒவ்வொரு கட்சிகளும் தங்களுக்குள் பிரசாரம் செய்து கொண்டிருக்கின்றன. கட்சி உறுப்பினர்களுக்கிடையில் பிளவுகள் உள்ளன.

அண்மையில் கூட ஒரு கட்சியின் மாகாணசபை உறுப்பினரை அந்த கட்சியின் செயலாளர் கடுமையாகத் திட்டியிருக்கிறார். தேர்தல் காலங்களில் ஒரு மாதிரியும், அதன்பின்னர் இன்னுமொரு மாதிரியும் விடயங்கள் நடைபெறுகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாளை

31.08.2017
வியாழக்கிழமை

நட்சத்திரம் : மூலம் பி.இ 6.01 வரை
திதி : தசமி முழுவதும்
சுபநேரம் : 7.35 – 9.05 வரை
இராகுகாலம் : 1.35 – 03.05 வரை

தெங்கு உற்பத்தி சபையினரால் காணி சுவீகரிப்பு: ஏற்றுக்கொள்கிறார் பிராந்திய முகாமையாளர்!

கிளிநொச்சி, ஓக. 30

கிளிநொச்சி, பச்சிலைப் பள்ளி கரந்தாய் காணி மக்களிடம் இருந்து தெங்கு உற்பத்தி சபையினரால் அடாத்தாகப் பிடிக்கப்பட்டது என்பதை தெங்கு உற்பத்தி சபையின் பிராந்திய முகாமையாளர் வைகுந்தன் ஏற்றுக்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இந்த காணி தொடர்பாக இணைத் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

மக்களுக்கு உரித்தான இந்தக் காணிகள் மக்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும் என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட போதிலும் இது வரையில் அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படாத நிலைமை காணப்படுகின்றது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வடமாகாண முதலமைச்சர் கரந்தாய் காணியின் நிலை தொடர்பாக வினவியுள்ளார்.

இது குறித்து தெங்கு உற்பத்தி சபையின் பிராந்திய முகாமையாளர் வைகுந்தன் கருத்துத் தெரிவித்தவை வருமாறு:-

நான் இதில் முடிவெடுக்கும் அதிகாரி அல்லன். தகவல்களை எமது அமைச்சுக்குத் தெரிவித்தேன். அவர்கள் மாவட்ட செயலாளர் முன்னிலையில் கூட்டம் ஒன்றைக் கூட்டினார்கள்.

அதில் நான் மொழிபெயர்ப்பாளராகத்தான் கலந்து கொண்டேன், எங்களுக்கு இந்தக் காணி, சீர்திருத்த ஆணைக் குழுவால் 1972ஆம் ஆண்டு வழங்கப்பட்டது, அதற்குரிய ஆவணங்கள் எம்மிடம் இருக்கின்றன எனத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் -

இவர்களின் தலைவரால் குறித்த காணி அரச காணி என தகவல் வழங்கப்பட்டது என மாவட்ட செயலாளர் முன்னிலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

அந்த முகாமையாளரே தவறான தகவல்களை அமைச்சுக்கும் அதன் அதிகாரிகளுக்கும் வழங்கியுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த வடமாகாண முதலமைச்சர்-

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளரை சகல தகவல்களையும் தமக்கு அனுப்பி வைக்குமாறும், தாம் அமைச்சருக்கு கடிதம் எழுதி மக்களிடம் காணிகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்து அதற்கான தீர்வைப் பெற்றுத்தர முயற்சிப்பேன் எனக் குறிப்பிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (க)

செஞ்சிலுவைச் சங்கத்தின் முதலுதவி: நூற்றுக்கணக்கான மக்கள் பயன்!

கிளிநொச்சி, ஓக. 30

பூநகரி - செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா நிகழ்வின் போது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையினால் முதலுதவிச்சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனால், நூற்றுக்கணக்கான மக்கள் பயனடைந்துள்ளதுடன், பூநகரி மண்ணித் தலை செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா வருடாந்தம் ஓகஸ்ட் மாதத்தில் 7 நாள்கள் நடைபெறும்.

இந்தத் திருவிழா கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக்கிளையால் பகல், இரவுச்சேவையாக மேற்கொள்ளப்பட்ட முதலுதவியில் நூற்றுக்கணக்கான மக்கள் பயன்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

கிளிநொச்சி கல்விப் பணிமனைக்கு நிரந்தர காணி வழங்க தீர்மானம்!

கிளிநொச்சி, ஓக. 30

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை தற்காலிகமாக இயங்கி வரும் காணியை நிரந்தரமாக வலயக் கல்விப் பணிமனைக்கு வழங்குவது என கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங் கிணைப்புக் குழு கூட்டம் நேற்றுமுன் தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது தற்போது வலயக் கல்விப் பணிமனை இயங்கும் காணி பணிமனைக்குச் சொந்தமானது அல்ல. அதனை வலயக் கல்வி பணிமனைக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், கிளிநொச்சி கல்வி வலயம் தற்போது இயங்கும் தற்காலிக காணியை நிரந்தரமாக வலயக் கல்விப் பணிமனைக்கு வழங்குவது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கல்விவிடயம்சார்பில் வலயக் கல்விப்பணிப்பாளர் யோன் குயின்ரஸ் முன்வைத்த விடயத்தை ஆராய்ந்தபோதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

அமைச்சர் ராஜிதவுக்கு எதிரான

நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐ.தே.க. ஒருபோதும் அனுமதிக்காது

லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 30

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு ஐ.தே.க. அனுமதிக்காது என்று அவை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வரைவில், பல சட்டரீதியான குறைபாடுகள் உள்ளன.

இது சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படும் போது, இதனை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று நாங்கள் அவரிடம் எழுத்து மூலம் கோருவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

யுரேனஸ் இளைஞர் கழகத்தின் மாபெரும் கலை விருது விழா!

வவுனியா, ஓக. 30

வவுனியா - சமளங்குளம் யுரேனஸ் இளைஞர் கழகம் நடத்திய மாபெரும் கலை விருது விழா மிகச் சிறப்பாக இடம் பெற்றது.

இந்த நிகழ்வு, சமளங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலய முன்றிலில் இளைஞர் கழகத்தின் தலைவர் கணேசலிங்கம் சிம்சுபன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு, 20 வருடங்களின் பின்னர் நடைபெறுவதுடன், இதில் பங்குபற்றியவர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு தொடர்பாக கழகத்தின் தலைவர் கருத்துத் தெரிவித்தவை வருமாறு:-

இது கலைஞர்களுக்கான களம். இதன் கதவை நாங்கள் திறந்து விட்டிருக்கின்றோம். அதனை நீங்கள் பயன்படுத்திகொள்ளுங்கள்.

அதுமட்டும் இன்றி வெறுமனவே வாய்பேச்சு அல்ல கலைஞர்களின் உள்ளத்தில் உள்ளவை புரிந்து கொள்ளுங்கள் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்த நிகழ்ச்சிக்காக இரவு பகலாக பாடுபட்ட இளைஞர் கழக உறுப்பினர்களான பிரேம்குமார், நிரோஷன், தனுஷன், கஜன், கிருசாந், திலக்சன் ஆகியோருக்கு அக்கிராம மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (க-100)

மக்களின் சொத்துக்களை எவரும் கொள்ளையடிக்க இடமளிக்க மாட்டோம் என்கிறார் கிழக்கு முதல்வர்!

மட்டக்களப்பு, ஓக. 30

மக்களுடைய சொத்துக்களை சூறையாடுவதற்கோ கொள்ளையடிக்கவோ எவராவது முற்படுவார்களானால் கிழக்கின் முதலமைச்சராய் நான் இருக்கும் வரை அதற்கு இடமளிக்க மாட்டேன் என கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

யாராவது மக்களுடைய சொத்துக்களைக் கொள்ளையடிக்கவோ ஊழல் செய்யவோ அல்லது துஷ்பிரயோகம் செய்யவோ முற்படுவார்களானால் அதனை தடுப்பதற்கு முன்னின்று செயற்பட தயாராக உள்ளளேன் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஏறாவூரில் மிச் நகர் பிரதான வீதி மற்றும் வடிகான் வீதி ஆகியவற்றை கொங்கிரீட் வீதிகளாக புனரமைக்கும் திட்டத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மிச்நகர் பிரதான வீதி மற்றும் வடிகான் வீதி ஆகியன கிழக்கு முதலமைச்சரின் நிதியொதுக்கீட்டில் 40 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு புனரமைக்கப்படவுள்ளன.

அதற்கான அடிக்கல் நடும் நிகழ்வில் முதலமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஓட்டமாவடி பிரதேசத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையால் ஏழை மக்களுக்கு 50 வீடுகள் வழங்கப்பட்ட போதிலும் அவற்றை நிர்மாணிக்க காணி இல்லாத காரணத்தால் அவை மீள அரசாங்கத்துக்கே திருப்பிச் செல்கின்ற நிலை காணப்பட்டது.

ஏனெனில், அவற்றை நிர்மாணிக்கவேண்டிய காணியை அரசியல்வாதியொருவர் மக்களுக்கு கிடைப்பதை தடுத்து வைத்திருந்த நிலையில் அதனை எனது தற்துணிவு அதிகாரத்தைப் பயன்படுத்தி இரண்டு வாரங்களுக்குள் மக்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தேன்.

பின்னர் வெட்கமின்றி அதே காணிக்கு காலையிலேயே சென்று வீட்டுத் திட்டத்திற்கு அடிக்கல்லை அந்த அரசியல்வாதி நட்ட கேவலமான சம்பவம் நடந்தது.

நாங்கள் மக்கள் காணிகளை கையகப்படுத்தி சேவைகளை முன்னெடுக்கவில்லை.

கடந்த வாரம் ஏறாவூரில் ஆடைத்தொழிற்சாலையொன்றை நான் திறந்து வைத்தேன். அந்த ஆடைத் தொழிற்சாலை அமையப் பெற்றுள்ள இடம் எனது தாய் வாழ்ந்த இடம்.

இருந்தாலும் நமது பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்களாகச் சென்று கஷ்டப்படக் கூடாது என்ற எனது லட்சியத்தை நிறைவேற்ற எதை வேண்டுமானாலும் நான் அர்ப்பணிக்கத் தயாராக உள்ளேன்.

அதே போன்று ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்ட ஆடைத்தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தை எனது சொந்த நிதியைப் பயன்படுத்தி நான் வாங்கிக் கொடுத்தேன்.

ஆகவே, நாம் மக்கள் இடங்களைக் கையகப்படுத்தி எமது நெருங்கியவர்களுக்கோ பினாமிகளுக்கோ வழங்காமல் எமது காணிகளை நாம் மக்களுக்கு வழங்கி அவர்கள் வாழ்வாதாரத்தை உயர்த்த முற்படுகின்றோம்.

கடந்த 30 வருடமாக அரசியல் செய்கின்றவர் ஓர் இராஜாங்க அமைச்சராக இருக்கின்றவர் காத்தான்குடி நகர சபைக் கட்டடத்தை தான் கட்டினார் என ஊடகங்களுக்கு அறிக்கை விட்டுத் திரிகின்றார்.

30 ஆண்டுகால அரசியலில் இருக்கும் அவருக்குத் தெரியும் மத்தியரசின் ஒரு பணியை முடிப்பதென்றால் பல்வேறு கடிதத் தொடர்புகள் இருக்கும். நகர சபைக் கட்டடத்தை தான் நிர்மாணித்தமைக்கு ஆதாரமான ஒரு கடிதத்தை காட்டுமாறு சவால் விடுகின்றேன்.

அத்துடன், காத்தான்குடி நகர சபைக் கட்டடமோ ஏறாவூர் நகர சபைக்கட்டடமோ யாரின் முயற்சியாலும் ஆரம்பிக்கப்பட்டதல்ல. அவை நெல்சிப் எனப்படும் வடக்கு கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி மன்றங் களின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாகவே அதன் நிர்மாணங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அவ்வாறானால் நெல்சிப் நிதியினால் தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ளூராட்சி மன்றங்களும் நிர்மாணிக்கப்பட்டன. அதற்கு அரசியல்வாதிகள் உரிமை கோரமுடியாது.

அவ்வாறானால் நீங்கள் மாத்திரம் எவ்வாறு உரிமை கோரமுடியும்

அத்துடன் இன்று நெடுந்தெருக்கள் சம்பந்தமாக உரிமை கோர வருகின்றார்கள். நான் அவர்களுக்குச் சவால் விடுகின்றேன் முடிந்தால் நெடுந்தெருக்கள் திட்டத்தில் ஒன்றை நிறுத்திக் காட்டுமாறு.

கடந்த 30 வருடங்களாக இராஜாங்க அமைச்சராக இருக்கும் நீங்கள் கடந்த 30 வருடத்தில் காத்தான்குடி மாத்திரமல்ல மட்டக்களப்பு மாவட்டத்தில் எத்தனை பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்கியுள்ளீர்கள் என்ற பட்டியலைக் காட்டுங்கள் நான் கடந்த இரண்டு வருடத்தில் தொழில் வாய்ப்புக்களை வழங்கிய பட்டியலைக் காட்டுகின்றேன்.

ஆகவே, மக்களை ஏமாற்றி அரசியல் செய்கின்றமையை விடுத்து ஆக்கபூர்வமான முறையில் அரசியலை முன்னெடுங்கள் மாறாகச் சுயலாப அரசியலை முன்னெடுக்க வேண்டாம் என்று தெரிவிக்கிறார்.

(க)

எதிர்பார்த்த விளைச்சல் இல்லை: சம்மாந்துறை விவசாயிகள் கவலை!

மட்டக்களப்பு, ஓக. 30

காரைதீவு - சம்மாந்துறை பிரதேசத்தில் எதிர்பார்த்த அளவிற்கு விளைச்சல் இல்லையென விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த மாவட்டத்தில் ஏற்பட்ட வறட்சி நிலையின் காரணமாக சேனா நாயக்க சமுத்திரத்திலிருந்து மட்டுப்படுத்தப்பட்ட அளவு நீரே நீர்ப்பாசனத்திற்குதிறந்து விடப்பட்டிருந்தது.

இதனால், இம்முறை 42 ஆயிரம் ஏக்கரில் மாத்திரிமே செய்கை செய்யப்பட்டதுடன், எதிர்பார்த்த அளவுக்கு விளைச்சல் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, களை நெல்லினமும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றதாக விவசாயத்திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே, விவசாயிகள் இது தொடர்பில் போதிய கவனம் எடுக்காவிடின் அடுத்த போகத்தை கைவிட வேண்டிய நிலை உருவாகும் எனவும் திணைக்களம் எச்சரித்துள்ளது.

(க)

சொறிக்கல்முனை பங்குத் தந்தை ஒரு சாதனையாளர்!

பாராட்டுகிறார் மட்டக்களப்பு ஆயர்!

மட்டக்களப்பு, ஓக. 30

சொறிக்கல்முனை பங்குதந்தை அருட்பணி சு.திருச்செல்வம் ஒரு சாதனையாளர் என மட்டு. நகர் ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகை தெரிவித்துள்ளார்.

சொறிக்கல்முனை திருத்தலத்தில் முதல் நன்மையும் உறுதிப்பூசுதல் திருவருட்சாதனங்களை வழங்குதலும், புதிதாக அமைக்கப்பட்ட குருமனையையும் காரியாலயத்தையும் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சொறிக்கல்முனை பங்கு தளத்தின் மிக நீண்ட நாள் தேவையாக இருந்த ஒரு புதிய குரு மனையும், காரியாலயமும் இன்று பூர்த்தி செய்யப்படுகின்றது.

இதனை கட்டி முடிப்பதற்கு பலரும் பல வழிகளில் உதவி செய்துள்ளனர். பண வடிவிலோ, சேவை வடிவிலோ, உடல் மற்றும் உழைப்பு வடிவிலோ, செப உதவியாகவோ தங்கள் பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

விசேட விதமாக சொறிக்கல்முனை பங்கு மக்கள் தங்கள் பங்களிப்பை காத்திரமான முறையில் வழங்கியுள்ளனர். சொறிக்கல்முனை பங்கு மக்கள் பொருளாதாரத்திலும், ஆன்மீகத்திலும் கல்வியிலும் தொடர்ந்து முன்னேற எனது ஆசியை வழங்குகிறேன் என்றும் ஆயர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அருட்பணி சு.திருட்செல்வம் உரையாற்றினார். அவர் கூறியவை வருமாறு :-

ஆயரின் வழிகாட்டலினாலும் குருக்கள், அருட்சகோதரிகள், பங்கு மக்கள், பக்தர்களின் ஒத்துழைப்பாலும் இன்று ஒரு கனவு நனவாகின்றது.

இந்த திருச்சிலுவை திருத்தலத்தை நோக்கி இலங்கையின் பல பாகங்களில் இருந்து இன, மொழி, சமய வேறுபாடின்றி பக்தர்கள் வருகை தருகின்றார்கள்.

எனவே இந்த திருத்தலத்திற்கு ஒரு காரியாலயமும் குருமனையும் அமைந்திருக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். இதற்கான அத்திபாரம் முன்னை நாள் பங்குத் தந்தை அருட்பணி யேசுதாசனால் இடப்பட்டது.

அவரது இடமாற்றத்தின் பின்னர் தற்போது இந்தக் கட்டடம் முழுமை பெறுகின்றது என்று தெரிவித்துள்ளார்.

பிரபாகரன் மீது நடத்தப்பட்ட தாக்குதலிலேயே பாலச்சந்திரனும் கொல்லப்பட்டாராம் :- கோட்டா!

கொழும்பு, ஓக. 30

ஒசாமா பின்லேடன், அவரது மனைவி, பிள்ளைகள் நிராயுத பாணிகளாக இருக்கும் போது சுட்டுக்கொன்றமை குறித்து கேள்வி எழுப்பாத ஐ.நா. அதிகாரிகள், இலங்கையில் போரின் இறுதியில் நடந்த சம்பவங்கள் குறித்து மாத்திரம் கேள்வி எழுப்புகின்றமை ஏன் என்று இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பு நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன், இலங்கை இராணுவத்தால் பிடிக்கப்பட்ட பின்னரே கொலை செய்யப்பட்டார் என்று கூறப்படுகிறது.

புகைப்பட ஆதாரங்கள் சிலவும் உள்ளன. நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் இந்த விடயம் குறித்து விமர்சித்துள்ளார். இதுபற்றி என்ன கூறுகின்றீர்கள்? என்று கோட்டாபய ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

அதற்கு அவர் பதில் வழங்குகையில் தெரிவித்தவை வருமாறு:-

இந்த விடயம் குறித்து பரிசீலனை நடத்தினோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாலச்சந்திரனைப் பிடித்து வைத்திருந்தமை குறித்த தகவல்கள் இல்லை. ஆகவே, அவருடைய மரணமும் போரின் போது தான் நடந்திருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

பிரபாகரனின் மூத்த புதல்வர் சார்ள்ஸ் அன்ரனி, தந்தையை விட்டு தனியாகச் சென்று போர் செய்தவர் என்று கூறலாம். ஆனால், பாலச்சந்திரன் அவரைப் போன்று தனியாகச் சென்று யுத்தம் செய்யக் கூடிய வயதுடையவராக இருக்கவில்லை. அதனால், அவர் பிரபாகரனுடனேயே இருந்திருப்பார்.

இவ்வாறான வரை தனியாக விட்டு பிரபாகரன் சென்றிருக்கமாட்டார் அல்லவா? பிரபாகரன் மீது நடத்தப்பட்ட தாக்குதலிலேயே அவரும் உயிரிழந்திருப்பார். அதிகாரபூர்வமாக நான் அறிந்து கொண்ட விவரம் இது தான்.

இதுகுறித்து பரவலாகப்

பேசுகின்றார்கள். ஒசாமா பின்லேடன், அவரின் மனைவி, அவர்களின் பிள்ளைகள் என்று எவருடைய மரணம் குறித்தும் பேசவில்லை. அவர்களை நிராயுதபாணியாக இருந்த போதே சுட்டுக்கொன்றார்கள். அதனை அமெரிக்க அதிபர் உள்ளிட்டவர்கள் நேரடியாக பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

எரிக் சொல்ஹெய்ம், ஐ.நா. அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் ஏன் இந்த விடயம் குறித்து பேசுகிறார்கள் இல்லை? கேள்வி எழுப்புகிறார்கள் இல்லை?

ஆனால், இலங்கையின் போர்க்களத்தில் இடம்பெற்ற இந்த விடயத்தைப் பெரிது படுத்தி விமர்சிக்கின்றார்கள்.

எனக்கு இன்னமும் நினைவிருக்கின்றது. போரின் இறுதி நாள்களில் இரவில் எந்த நேரத்திலும் கூட புலிகள் பாதுகாப்பு வலயங்களை உடைத்துக் கொண்டு செல்வார்கள் என்ற அச்சத்துடனேயே படையினர் இருந்தார்கள்.

மே 16 ஆம் திகதி இரவு ஒரு குழுவினர் களப்பு வழியாக பாதுகாப்பு வலயத்தை உடைத்துச் செல்ல முற்பட்டார்கள்.

அவ்வாறு பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ள நிலையில் சிறுவிடயம் குறித்துத்தான் விசாரணை செய்ய முற்படுகின்றார்கள்.

ஒசாமா விடயத்தைக் கண்டுகொள்ளாதிருக்கின்றார்கள். அதற்காக, ஒசாமா பின்லேடன் கொலை செய்யப்பட்டமை தவறு என்று கூறவில்லை.

எமது விவகாரத்தை ஒரு வகையிலும் அந்த விவகாரத்தை இன்னொருவகையிலும் இருவிதமாகப் பார்ப்பது ஏன் என்றே கேட்கின்றேன் என்று அவர் பதிலளித்துள்ளார்.

போர் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது?

அமெ. அட்மிரலுக்கு இலங்கைத் தளபதி விவரிப்பு!

அமெரிக்க கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வில்லியம் ஜேபோலன், இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்க வைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கொழும்பில் நடக்கும் பாதுகாப்புக் கருத்தரங்கில் முக்கிய உரை நிகழ்த்துவதற்கு இலங்கைக்கு வந்துள்ள அட்மிரல் வில்லியம் ஜேபோலன் நேற்றுமுன்தினம்பிற்பகல்இலங்கை இராணுவத் தளபதியுடன்கலந்துரையாடினார். இதன் போது, வன்முறை தீவிரவாதம், சமாதான நுட்பங்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்துகலந்துரையாடப்பட்டுள்ளன.

அதேவேளை, 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர்,முன்னெடுக்கப்பட்ட விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது என்பது குறித்து அட்மிரல் வில்லியம் ஜேபோலனுக்கு, இலங்கை இராணுவத் தளபதி விவரித்துக் கூறியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் கருத்துடன் அமெரிக்கத் தூதுவரும் இணக்கம்!

கொழும்பு, ஓக. 30

ஜெனீவா தீர்மானத்தை நிறைவேற்றுவதில் இலங்கை எந்த முன்னேற்றத்தையும் காட்டத் தவறியிருப்பது, சர்வதேச சமூகத்தை ஏமாற்றமடையச் செய்துள்ளது என்ற, ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதியின் கருத்தை இலங்கைக்கான அமெரிக்க தூதுவரும் ஒப்புக் கொண்டுள்ளார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்திருந்த செவ்வியில், இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின், இராஜதந்திர விவகாரங்களுக்கான பிரதிநிதி போல் கொட்பிறி, 'இலங்கை அரசு கூடிய விரைவில் சிறப்பு நீதிமன்றம் ஒன்றையோ, நீதிப் பொறிமுறையையே அமைப்பதற்கான வாய்ப்பு எதுவும் தென்படவில்லை.

தீர்மானம் நிறைவேற்றப் பட்டு, 18 மாதங்கள் கழித்தும், இலங்கை அரசு எந்த முன்னேற்றத்தையும் காண்பிக்கவில்லை என்பது சர்வதேச சமூகத்தை ஏமாற்றமடையச் செய்துள்ளது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் காணாமற் போனோருக்கான பணியக சட்டம் நிறைவேற்றப் பட்ட போது நான் நம்பிக்கையுடன் இருந்தேன். ஆனால், இன்னமும் எந்த முன்னேற்றமும் இல்லை.

இதன் தொடர்ச்சியாக உண்மை ஆணைக்குழு நிறுவப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அது வெறும் வரைவு நிலையிலேயே இருக்கிறது என்று கூறியிருந்தார்.

இந்தச் செவ்வி குறித்து, தனது கீச்சகப் பக்கத்தில் அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

நல்லிணக்கம் தொடர்பான

சில மிக முக்கியமான விடயங்களை ஐரோப்பிய ஒன்றியத்தின், இராஜதந்திர விவகாரங்களுக்கான பிரதிநிதி போல் கொட்பிறி வெளியிட்டுள்ளார்.

ஐ.நாவுக்கான இலங்கையின் கடப்பாடுகளில் முன்னேற்றங்கள் தேவை என்று அதில் குறிப்பிட்டுள்ளார். (க)

இலங்கை உள்ளிட்ட நாடுகளுடன் ஒத்துழைப்பை பலப்படுத்த அமெ.முயற்சி!

இலங்கை உள்ளிட்ட பிராந்திய நாடுகளுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான இராஜதந்திர முயற்சிகளை அமெரிக்காமுன்னெடுத்துள்ளது என அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்திய- அமெரிக்க உறவுகள் தொடர்பாக பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இதுபற்றிக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை, பங்களாதேஷ் உள்ளிட்ட பிராந்திய நாடுகளுடன் இராஜதந்திர ஒத்துழைப்பை வலுப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிச்சயமாக இது மிகவும் முக்கியமானது. இந்திய பெருங்கடல் பிராந்தியம் தொடர்பாக இந்தியா பவுண்டேசன் நடத்தும் மிக முக்கியமான கருத்தரங்கு இலங்கையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் அமெரிக்காதரப்பில் உயர் மட்டப் பிரதிநிதிகள் பங்கேற்பர். எமது கடற்படையின் ஈடுபாடுகளுக்கு இவை அனைத்தும் மிகவும் முக்கியமான முயற்சிகளாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புலிகளுடனான போர் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளத் தயார்: இராணுவத் தளபதி!

விடுதலைப் புலிகளுடனான முப்பது ஆண்டு கால போர் அனுபவங்களை பிற நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளத் தாயாராக இருக்கிறோம் என இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான கொழும்பு பாதுகாப்பு கருத்தரங்கில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அழிவுகரமான வன்முறைகள் நாட்டில் மீண்டும் துளிர்ப்பதைத் தடுப்பதிலும், பிராந்திய மற்றும் ஆசிய பிராந்தியத்தின் பாதுகாப்பிலும் இலங்கை இராணுவம் கரிசனை கொண்டுள்ளது. பிராந்திய மற்றும் ஆசியாவின் பாதுகாப்புக்கட்டமைப்பை வலுப்படுத்தவும், பாதுகாப்பு உறவுகளில் ஒருங்கிணைப்பை வலுப்படுத்தவும் தீவிரமான பாத்திரத்தைவகிப்பதற்கும், பாதுகாப்பு நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்வதற்கும் இலங்கை இராணுவம் முயற்சிக்கிறது.

வன்முறைகள் இப்போது சவாலானதொரு பிரச்சினையாகும். உலகில் நீங்கள் வாழும் பகுதி எது என்பது முக்கியமில்லை. துரதிஷ்டவசமான தீவிரவாதத்தினால் தூண்டப்பட்டவன்முறை உலகளவில் போய்விட்டது. ஒவ்வொரு மனிதனும் இதனால் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பின் பின்னர் மஹிந்தவின் புதிய கூட்டணி அறிவிப்பு!

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிப்பு வெளியானதன் பின்னர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணி அறிவிக்கப்படும் என பிவித்துரு ஹெல உறுமயவின் பொதுச்செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில்இணைந்துள்ளஅனைத்துக் கட்சிகளும் இணைந்து புதிய கூட்டணி உருவாகும்.

அதுமட்டுமல்ல, அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இந்தக் கூட்டணியில் இணைய முடியும்என்றும் அவர்கூறியுள்ளார்.

தம்பசிட்டி நடமாடும் சேவையால் பயன்பெற்றனர் 600 பயனாளிகள்

பருத்தித்துறை, ஓக.30

குறைவான வசதிகளையுடைய மக்களுக்கான சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நடமாடும் சேவை, தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தம்பசிட்டி மெ.மி.த. க.பாடசாலையில் இடம்பெற்றது.

இந்த நடமாடும் சேவையில் 600 இற்கும் மேற்பட்ட பயனாளிகள் பங்குபற்றி பல்வேறுபட்ட சேவைகளைப் பெற்று பயனடைந்துள்ளனர்.

★ இலவசமாக பிறப்பு, இறப்பு,திருமணப்பதிவுச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

★ பிறப்பு, இறப்பு, திருமண பதிவுச் சான்றிதழ்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

★ இலவசமாக சான்றிதழ்கள் மும்மொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்து வழங்கப்பட்டன.

★ இலவசமாகசட்டரீதியான திருமணப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

★ தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்கான துணை ஆவணங்கள், புகைப்படம், பொலிஸ் அறிக்கை உட்பட பெற்றுக் கொடுக்கப்பட்டு விண்ணப்பங்கள் கையேற்கப்பட்டன.

★ EPF, ETF தொடர்பான ஆலோசனை உரிய தரப்பினரால் வழங்கப்பட்டதுடன், அதன்மூலம் கடன் பெற்றுக் கொள்ளல் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

★ அடிப்படை உரிமை, மனித உரிமைகளிற்கான தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

★ ஓய்வூதியப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

★ நீர், மின்சாரம் போன்றவற்றுக்கான தீர்வுகள் பெற்று கொடுக்கப்பட்டன.

★ அரச காணிப் பிணக்குகளுக்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

★ கமநல சேவைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் பெற்று கொடுக்கப்பட்டன.

(இ)

தினசரி ராசி பலன் 30.08.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 14ஆம் நாள் சதுர்த்தசி பி.இ 5.17 மணி வரை. பின்னர் தசமி. நட்சத்திரம்: கேட்டை பி.இ 1.53 மணி வரை. பின்னர் மூலம். சித்தயோகம் பி.இ 1.53 மணி வரை. ராகுகாலம்- பகல் 12.11 மணி முதல் 1.43 மணி வரை. சுபநேரம்- மாலை 4.35 மணி முதல் 6.04 மணி வரை. இன்று திவசம் செய்ய வேண்டிய திதி. ஆவணி மாத வளர்பிறை நவமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: கேட்டை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

மேஷம் : சஞ்சலமான நாள். உத்தியோகத்தில் ஓய்வில்லாமல் உழைக்க வேண்டிவரும். தொழிலில் மறைமுகப் போட்டியால் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் சில தடுமாற்றம் உண்டாகும்.

ரிஷபம்: மத்திம பலன்கள் காணப்படுகின்றன. அனுசரித்து நடந்தால், குடும்பத்தில் வாக்குவாதங்கள் ஏற்படாமல் இருக்கும். விடாமுயற்சியால் தடைப்பட்ட பணிகளை மீண்டும் செய்யும் வாய்ப்பு கனிந்து வரும்.

மிதுனம்: ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பணப்புழக்கம் திருப்தியைத் தரும். தொழிலில் நல்ல திருப்பம் உண்டாகும். எதிர்பாராத அறிமுகங்களால் லாபம் கிட்டும்.

கடகம்: இன்பமான நாள். நினைத்த காரியத்தை செய்து முடித்து மகிழ்வார்கள். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். வீட்டில் மங்கல நிகழ்வுகள் நடைபெறும். பெண்கள் விரும்பிய பொருள்கள் வாங்கி மகிழ்வார்கள்.

சிம்மம் : கவலையான நாள். குடும்பத்தில் அமைதி குன்றும். மறைமுகமாக எதிரிகளால் தொல்லை உண்டாகும். தொழிலில் சில நெருக்கடிகள் தோன்றி மறையும்.

கன்னி : சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். சோர்வு, அசதியால் வேலையில் கவனக்குறைவு உண்டாகும்.

துலாம் : யோகமான பலன்கள் காணப்படுகின்றன. பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். வெளிநாட்டுச் செய்தியால் வாழ்வில் மாற்றம் உண்டாகும். வீடு, வாகன வசதிகள் பெருகும்.

விருச்சிகம் : அதிஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். நெடுநாள்களாகத் தடைப்பட்டுக் கொண்டிருக்கும் சுபகாரியங்கள் நல்லவிதமாக நடந்தேறும்.

தனுசு : சஞ்சலமான நாள். பணவரவுகள் குறையும். வேலையில் கவனக்குறைவால் சிலருக்கு பதவியை இழக்கும் நிலை ஏற்படும். ஆரோக்கியம் குறைவடையும்.

மகரம்: விருத்தியான நாள். இவர்களின் முயற்சியால் வெற்றியும் பெருமையும் அடைவார்கள். செய்யும் தொழில் விருத்தியடையும். பதவிகளில் உயர்வும் அதன்மூலம் நன்மைகளும் உண்டாகும்.

கும்பம் : சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு மத்திமமாக இருக்கும். செலவீனங்கள் அதிகரிக்கும்.

மீனம் : உயர்வான நாள். வருமானம் பன்மடங்கு உயரும். தொழிலகத்தை விரிவாக்கம் செய்யவும் புதிய கிளைகளைத் தொடங்கவும் திட்டமிடுவார்கள்.

சந்திராட்டமநாள்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோர் நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

கச்சாய் அம்மன் கோவில் பகுதியில் நடந்த

கொடிகாமம் பொலிஸ் நடமாடும் சேவை; பல்வேறு நன்மைகளைப் பெற்றனர் மக்கள்

சாவகச்சேரி, ஓக. 30

கச்சாய் அம்மன் கோவில் பகுதியில் சனசமூக நிலைய கட்டடத்தில் 5 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி கடந்த ஜூலை 20 ஆம் திகதி தொடக்கம் இயங்கி வந்த கொடிகாமம் பொலிஸ் நிலையத்தின் நடமாடும் பொலிஸ் சேவை கடந்த ஞாயிற்றுக் கிழமை நிறைவுக்கு வந்தது.இந்த நடமாடும் பொலிஸ் சேவையில் ஒரு மாத காலம் கச்சாய்,பாலாவி மற்றும் கெற்பேலி பொதுமக்கள் பலவிதமான நன்மைகளைத் தாம் பெற்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஒரு மாத காலம் இடம்பெற்ற நடமாடும் சேவை மூலம் அதிகளவு நன்மைகளை பெற்றுக் கொண்டனர் என்றும் -

அக்காலப்பகுதியில் மண் கடத்தல் சம்பவங்களும் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் இருந்தன என்றும் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (இ- 21)

கொழும்பில் கடன் அட்டைகளை திருடும் மர்மநபர் தொடர்பில் மக்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஓக. 30

திருடிய கடன் அட்டையை பயன்படுத்தி பண மோசடி செய்த நபர் தொடர்பில் கொழும்பு-கிராண்ட்பாஸ் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இந்த நபர் கடன் அட்டைகளைப் பயன்படுத்தி ஒரு லட்சத்திற்கும்அதிகமானபணத்தை மோசடி செய்துள்ளார் எனப் பொலிஸ் வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

வத்தளை, பேலியகொடை சந்தை மற்றும் வத்தளையில் உள்ள பிரபல ஆடைக் கடையில் கடன் அட்டையை பயன்படுத்தி பொருள்கள் கொள்வனவு செய்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நபரினால் கடன் அட்டையுடன் பணப் பை ஒன்றும் திருடப்பட்டுள்ளது.

அதன் ஊடாக அடையாள அட்டை உட்பட பல பெறுமதியான ஆவணங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன .

இந்த நிலையில், கடன் அட்டைகளைப் பயன்படுத்து

வோர் மிகவும் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

(க)

வவுனியா வைத்திசாலையில் நோயாளர்கள் பெரும் அவதி!

வவுனியா, ஓக. 30

வவுனியா பொது வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றனர் என தெரியவருகின்றது.

இரத்த பரிசோதனைக்கு நோயாளர்கள் இரத்தத்தினை வழங்கி விட்டுப் பரிசோதனை அறிக்கையைப் பெறச்செல்லும் பொது தொலைந்து விட்டதாகத் தெரிவித்து மீண்டும் இரத்தத்தினை நோயாளரிடம் பெற்று பரிசோதனை செய்யப்படுகிறது என்றும் நோயாளர்கள் நடந்து செல்ல முடியாதநிலையில்அவர்களை காவு வண்டியில் வைத்து நோயாருடன் வருபவரே தள்ளிச்செல்ல வேண்டியுள்ளது என்றும் கவலை தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக நோயாளருடன் வயோதிபர்கள் செல்லும் பட்சத்தில் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது எனத் தெரிவிக்கும் நோயாளர்கள், இது தொடர்பாக வைத்தியசாலை பணிப்பாளர் ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கின்றனர். (இ-100)

அனைத்துலக காணாமற் போனோர் தினத்தை (International Day of the Disappeared) முன்னிட்டு இந்தக் கட்டுரை வெளியிடப்படுகிறது

காணாமற்போனோரின் உறவுகளுக்கு எப்போது விடிவு?

அரசியல்வாதிகளின் செயற்பாடுகளில் நம்பிக்கை இழந்த நிலையில் அவர்கள்!!

உலகளாவிய ரீதியில் ஆண்டுதோறும் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி காணாமற் போனோர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. காணாமற்போனோர் என்பது இன்று உலகளாவிய ரீதியில் ஒரு முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. மனிதாபிமானம் பற்றி, மனித உரிமைகள் பற்றி எத்தனை அமைப்புகள் செயற்பட்டாலும் கூட இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதுள்ளது. காணாமற்போனோர் எனுமிடத்து இது ஒரு நாட்டிற்கு மாத்திரம், அல்லது ஒரு கண்டத்திற்கு மாத்திரம் உரித்தான பிரச்சினையாக எடுத்துக் கொள்ள முடியாது. இது உலகளாவியது.

இந்தப் பிரச்சினையின் தோற்று நிலையை நோக்குமிடத்து மத்திய காலம் வரை பின்னோக்கிச் செல்லலாம். வரலாற்றுக் காலங்களில் யுத்த காரணிகள் நிமித்தமும் மன்னர்களின் அதிகாரப்பின்னணியிலும் இக் காணாமற்போதல் சம்பவங்கள் இடம் பெற்றதாக சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. அடிமைத்துவ யுகம் காணப்பட்டநேரத்தில்இந்தக்காணாமற்போனோர் பிரச்சினை முக்கிய பிரச்சினையாக அமையவில்லை. 20ஆம் நூற்றாண்டு கால கட்டங்களில் காணாமற்போனோர் வரலாற்றில் முன்னைய காலங்களை விட அதிகமாகக் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது. குறிப்பாக நாடுகளுக்கிடையே ஏற்பட்ட யுத்தங்கள், இனங்களுக்கு இடையில் ஏற்பட்ட கலவரங்கள் பல்நாட்டு யுத்தங்கள் என்பன காரணமாக இத்தொகை அதிகரித்த தாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹிட்லரின் காலத்தில் 10 லட்சம் யூதர்கள்

முதலாம் உலக மகாயுத்த காலத்திலும், இரண்டாம் உலகமகா யுத்த காலத்திலும் பல இலட்சக் கணக்கானோர் காணாமற்போயுள்ளனர். இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் ஹிட்லரின் கொடூரமான நடவடிக்கையின் காரணமாக பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட யூத இனத்தவர் மாத்திரம் காணாமற்போயுள்ளனர். இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் சுவீடனைச் சேர்ந்த ரஓல் வொலண்பேக் என்பவர் காணாமல்போவோர் விடயத்தில் கூடிய அக்கறை கொண்டு செயலாற்றியுள்ளார். 20ஆம் நூற்றாண்டில் தலை சிறந்த மனிதாபிமானி என வர்ணிக்கப்படும் ரஓல் வொலண்பேக் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட காணாமற்போனோரை மீட்டுள்ளார் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. உலக வரலாற் றில் ஒரே சந்தர்ப்பத்தில் காணாமற் போனோர் பெரும் தொகையாக மீட் கப்பட்ட கைங்கரியத்தின் உரித்தாள ராக ரஓல் வொலண்பேக் இன்று வரை போற்றப்படுகிறார்.

1945ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் திகதி ரஓல் வொலண்பேக் ரஷ்யப்படையால் கைது செய்யப்பட்டார். இவரின் கைதை அடுத்து இவருக்கு என்னவானது என்பது இன்னும் உலகிற்கு மர்மமாகவே உள்ளது. காணாமற்போனோர் தினம் அனுஷ்டிக்கப்படும் நேரங்களில் ரஓல் வொலண்பேக் நினைவு கூரப்பட்டே வருகின்றார்.

காணாமற்போனோர் பற்றி ஆய்வுகளை மேற்கொள்ளும் போது உலகின் பல நாடுகளிலும் காவற்துறையினராலோ அல்லது பாதுகாப்புப் படையினராலோ அல்லது தீவிரவாதிகளாலோ, மாஃபியா குழுக்களாலோ, ஆயுதக்குழுக்களினாலோ பல்வேறு காரணங்களுக்காகவும் கைது செய்யப்பட்டு காணாமற் போவோர் குறித்த ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்தினம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

வட அமெரிக்காவுக்கும், தென் அமெரிக்காவுக்கும் இடையே உள்ள நிலப்பகுதியில் உள்ள ஒரு குடியரசு நாடான கொஸ்டாரிக்காவில் 1981 இல் தொடங்கப்பட்ட கைதாகிக் காணாமற்போவோரின் உறவினர்களின் கூட்டமைப்பு (Federation of Associations for Relatives of the Detained&Disappeared, FEDEFAM) என்ற அரச சார்பற்ற அமைப்பின் நடவடிக்கைகளுக்கமைய இத்தினம் ஏற்படுத்தப்பட்டது.

இரகசிய கைதுகளுக்கு எதிராக நடவடிக்கை

லத்தீன் அமெரிக்காவில் இரகசியமான முறையில் கைது செய்யப்படுவதை எதிர்த்தே இவ்வமைப்பு முதன் முதலில் கோரிக்கை விடுத்தது. அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் குறிப்பாக சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International), மனித உரிமை மீறல்களைக் கையாள்வதற்காக உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் சர்வதேச அமைப்பான "மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு" மற்றும் பன்னாட்டு மனிதாபிமான அமைப்பான சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கம் ஆகியன இந்த இரகசியக் கைதுகளுக்கு எதிராக அதிக அக்கறை கொண்டு செயற்படுகின்றன.

போர் வேளையில் வடக்கு, கிழக்கில்...!

இலங்கையிலும் கடந்த 30 ஆண்டு கால யுத்தத்தின் போதும் தீவிரவாத அமைப்புகள் தமது படை பலத்தை அதிகரித்துக் கொள்வதற்காக ஆட்கடத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனூடாகவும் காணாமற்போனோர் எண்ணிக்கை அதிகரித்தது.

அதேவேளை, வடக்கு கிழக்கில் யுத்த காலத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் காணாமற் போயுள்ளனர். வன்னி யுத்தத்தின் போதும் ஆயிரக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர் எனக் கூறப்படுகிறது. அண்மைக் காலங்களாக இலங்கையில் வெள்ளை வான்கள் மூலமாக கடத்தப்படுதலும் காணாமல் போதலும் அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்படும் அதே நேரத்தில் இது விடயமாக நாடாளுமன்றத்தில் கூட பல்வேறு பட்ட வாதப் பிரதி வாதங்கள் இடம் பெற்றுள்ளன.

மேலும் இயற்கை காரணிகளாலும் காணாமல் போகின்றமை இடம் பெறுகின்றது. உதாரணமாக 2004ஆம் ஆண்டு சுனாமியின் போது இலங்கையில் மாத்திரம் காணாமல் போனோர் பத்தாயிரத்திற் கும் மேற்பட்டோர் எனக் கூறப்படுகிறது.

நான்கு தசாப்தங்களாக காணாமற் போனோர் தொடர்பான காரணிகளை எடுத்து நோக்குமிடத்து யுத்தக்காரணிகள் மாத்திரம் அன்றி பாலியல் நோக்கத்திற்காகவும், விற்பனை நோக்கத்திற்காகவும் சிறுவர்கள், இளம் பெண்களை கடத்தல், பழிவாங்கும் நோக்கத்தோடு கடத்தல், கப்பம் பெறும் நோக்கத்துடன் கடத்தல், உடல் உறுப்புக்களை திருடும் நோக்கத்துடன் கடத்தல்.... இவ்வாறு பல நோக்கங்கள் முதன்மைப் படுத்தப்படுகிறன்றன.

அமெரிக்கா உள்ளிட்ட உலகம் முழுவதும் எல்லா நாடுகளிலும் ஆள் கடத்தல் வியாபாரம் நடந்துகொண்டு தான் இருக்கிறது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என அனைத்துத் தரப்பினரும் இக் கொடுமைக்கு உள்ளாகின்றனர். இவ்வாறு நாடு விட்டு நாடு சட்ட விரோதமாகக் கடத்திச் செல்லப்படுபவர்கள் வீட்டு வேலைகளைச் செய்வதற்கோ, பாலியல் தொழிலுக்கோ பலவந்தமாக உட்படுத்தப்படுகிறார்கள்.

ஆள் கடத்தலில் ஈடுபடுபவர்கள், அதற்கு உடந்தையாக இருப்பவர்கள், - சட்டத்திற்குப் புறம்பாக வேலைக்கு ஆள்களை எடுக்கும் மோசடிக்காரர்கள், தொழிலாளர்களைச் சுரண்டும் அதிபர்கள், அதற்குத் துணை போகும் ஊழல் மிகுந்த அரசு அதிகாரிகள் - இவ்வாறு சம்பந்தப்பட்ட அனைவரும் சட்டத்தின் பார்வைக்குக் கொண்டு வரப்பட்டு உரிய தண்டனையும் அளிக்கப்பட வேண்டும்.

கடந்த ஐந்தாண்டுகளில், உலகம் முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் ஆள் கடத்தலுக்கு எதிரான கடுமையான சட்டங்களைக் கொண்டு

வந்திருக்கின்றன அல்லது ஏற்கெனவே இருக்கின்ற சட்டங்களை இன்னும் கடுமையாக்கி இருக்கின்றன.

ஐந்தாண்டுகளுக்கு முன்பிருந்த நிலையுடன் ஒப்பிட்டால், தற்போது உலகெங்கிலும் ஆயிரக்கணக்கானவர்கள் இத்தகைய சட்டங்களால் உரிய முறையில் விசாரிக்கப்பட்டு தண்டனையும் பெற்று வருகிறார்கள்.

ஆனால்,இலங்கையில் நிலைமை தலைகீழாக உள்ளது. இங்கு காணாமற் போனவர்கள் ஏராளம்அவர்களின் உறவுகள் பல வருடங்களாக வேதனையில் வாடி வருகின்றன.

காணாமற் போனோர் தாய், தந்தை, மனைவி மற்றும்உறவுகள்தொடச்சியாக போராட்டங்களில் ஈடுபட்டுவருகிறனர். ஆனால், அவர்களுக்கு விடிவு கிடைக்கவில்லை.

இன்றைய தினத்திலும் கூட சொந்தங்களைத் தேடி வரும் உறவுகள், மாவட்டங்கள் தோறும் கண்ணீர் சிந்திப் போராடவுள்ளனர். கொழும்பில் மாநாடு ஒன்றையும் நடத்தவுள்ளனர்.

அரசியல்வாதிகளில் நம்பிக்கை இழந்த நிலையில் கண்ணீர் துவண்டு போயிருக்கும் அந்த மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் நல்ல தீர்வு பலன் கிடைக்க வேண்டும் என சர்வதேச காணாமல் போனோர் தினமான இந்நாளில் பிரார்த்திப்போம்! ★★★

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மிக முக்கிய ஆசிய கூட்டாளியான ஜப்பான், டோக்லம் பீடபூமி பிரச்சினையில் இந்தியாவின் நிலைப்பாட்டை ஆதரிப்பதில் அமெரிக்காவை விட இன்னும் கூடுதலாக முன் சென்றுள்ளது. அண்மையில், இந்தியாவுக்கான ஜப்பானிய தூதர் Kenji Hiramatsu கூறுகையில், இந்தியா ''பூட்டானுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை'' ஒன்றை கொண்டிருப்பதாக கூறி, அதற்கு சட்ட பூர்வ உரிமையில்லாத பகுதியில்

இந்திய துருப்புகள் தலையிட்டிருப்பதை நியாயப்படுத்தினார். பெய்ஜிங் பெயரைக் குறிப்பிடாமல், அவர் அறிவுறுத்துகையில், அந்த சர்ச்சைக்குரிய பீடபூமியில்ஒருசாலையைவிரிவாக்கும் முயற்சியானது ''இருக்கும் நிலைமையை பலத்தினால் ஒருதலைப் பட்சமாக மாற்ற'' முயற்சிப்பதாகும் என்றார்.

ஊழல் நிறைந்த இந்திய முதலாளித்துவவர்க்கம், சீனாவை மீண்டும் அடி பணிய வைக்கும் அமெரிக்க மற்றும் ஜப்பானிய ஏகாதிபத்திய உந்துதலில் அவற்றின் ஒரு சேவகராகச் சேவையாற்றி வருகிறது.

மேற்கத்திய மூலதனத்திற்கு பிரதான மலிவு-உழைப்பு விநியோக-சங்கிலி மையத்திலிருந்து சீனாவைப் புறந்தள்ளும் நம்பிக்கையில் மற்றும் அதன் சொந்த வல்லரசு அபிலாஷைகளை முன்னெடுப்பதற்காக, ஊழல் நிறைந்த இந்திய முதலாளித்துவ வர்க்கம், சீனாவை மீண்டும் அடிபணிய வைக்கும் அமெரிக்க மற்றும் ஜப்பானிய ஏகாதிபத்திய உந்துதலில் அவற்றின் ஒரு சேவகராக சேவையாற்றி வருகிறது.

சீன மக்கள் குடியரசில் முதலாளித்துவத்தை மீட்டமைத்ததில் இருந்து எழுந்த செல்வந்த தன்னலக் குழுக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சீன ஆட்சியிடம், அதற்கு எதிராக தொடுக்கப்பட்டு வரும் இடைவிடாத தாக்குதலுக்கு எந்த முற்போக்கான பதிலும் கிடையாது.

ஆசிய மற்றும் உலக மக்களின் போர்-எதிர்ப்புணர்வுக்கு எந்தவொரு முறையீடும் செய்ய அமைப்பு ரீதியிலேயே லாயக்கற்று அது, வொஷிங்டனுடன் ஓர் ஏற்பாட்டைச் செய்து கொள்ளும் முயற்சிக்கும், போர்நாடும் தேசியவாதத்தை முடுக்கிவிட்டு அதன் சொந்த இராணுவவாத நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

பெரும்பாலும் போர் ஏற்பட சாத்தியமுள்ளது, ஆனால் அந்த மோதலை இந்தோ-சீன எல்லையின் கிழக்கு பகுதியோடு மட்டுப்படுத்த முடியும் என்றும், அது ஒரு வாரமோ அல்லது இரண்டு வாரத்திற்கு நீடிக்கும் என்றும் சீன இராணுவம் நம்புவதாக கூறிய மக்கள் விடுதலை இராணுவத்தின் ஆதார நபர்களை, South China Morning Post இன் ஒரு சமீபத்திய கட்டுரை மேற்கோளிட்டது.

ஆனால், ஓர் எல்லைப் போரானது அமெரிக்காவில் தொடங்கி ஏனைய சக்திகளையும் வேகமாக உள்ளிழுக்கும் என்பதையே சமீபத்திய நாள்களின் அபிவிருத்திகள் எடுத்துக்காட்டுகின்றன. அதுபோன்றவொரு பேரழிவு தடுக்கப்பட்டாலும் கூட, இந்தியா மற்றும் சீனாவுக்கு இடையிலான ஒரு மோதல் ஓர் எல்லைப் போராக மட்டுப்பட்டு இருந்தாலும்கூட, அது உலகெங்கிலும் உழைக்கும் மக்களுக்கு பேரழிவுகரமான விளைவுகளைக் கொண்டிருக்கும்.

அதன் விளைவு என்னவாக இருந்தாலும், அதுபோன்றவொரு போர் ஏகாதிபத்தியத்தை மட்டுமே பலப்படுத்தும்.

ஒரு சீன ''வெற்றியானது'', இந்திய முதலாளித்துவ வர்க்கம் சீனாவுக்கு எதிராக அமெரிக்கத் தலைமையிலான நேட்டோ வகைப்பட்ட ஒரு கூட்டணியில் தன்னை இணைத்துக் கொள்ள மட்டுமே காரணமாக அமையும். அதற்கும் கூடுதலாக, ஜேர்மனி, ஜப்பான் மற்றும் பிற ஏகாதிபத்திய சக்திகள் அவற்றின் மீள் ஆயுதமயப்படுத்தல் போருக்கான திட்டங்களைத் தீவிரப்படுத்துவதற்கு இமாலயப் பகுதி சம்பவங்களை ஒரு சாக்குபோக்காகப் பயன்படுத்தும்.

சீனா தோல்வியடையும் ஒரு சம்பவத்தில், அமெரிக்க ஏகாதிபத்தியம் சீனாவுக்கு எதிரான அதன் பொறுப்பற்ற இராணுவ-மூலோபாய தாக்குதலைத் தீவிரப்படுத்த அந்தச் சந்தர்ப்பத்தை சாதகமாக்கிக் கொள்ளும்

சீனா தோல்வியடையும் ஒரு சம்பவத்தில், அமெரிக்க ஏகாதிபத்தியம் சீனாவுக்கு எதிரான அதன் பொறுப்பற்ற இராணுவ-மூலோபாய தாக்குதலைத் தீவிரப்படுத்த அந்தச் சந்தர்ப்பத்தை சாதகமாக்கிக்கொள்ளும். இதற்கிடையே, மோடி அரசாங்கம், 1962 அவமதிப்பை துடைத்துவிட்ட பெருமிதத்துடன், தெற்காசியாவின் மேலாதிக்க சக்தியாக அதை அங்கீகரிப்பதற்காக அதன் அண்டை நாடுகளை மிரட்டுவதற்கான அதன் முயற்சிகளை அதிகரித்து, தொழிலாள வர்க்கம் மீதான தாக்குதலைத் தீவிரப்படுத்த போர் நாடும் உணர்ச்சிகரமான தேசியவாத சூழலை முடுக்கிவிட்டு, இந்திய அரசியலை இன்னும் கூடுதலாக வலதிற்கு நகர்த்தும்.

எத்தருணத்திலும் அணுஆயுதப் போர் வெடிக்கலாம் என அதிகரித்த அதிர்ச்சியையும் மற்றும் பயத்தையும் உருவாக்கிக் கொண்டிருக்கும் வடகொரியாவுடன் "நுள்ளுப் பிறாண்டு கிள்ளுப் பிறாண்டு விளையாடுமா அமெரிக்கா?''

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வட கொரியாவுக்கு எதிராக, தொடர்ந்து அசாதாரண ஆத்திரமூட்டல் மற்றும் பொறுப்பற்ற அச்சுறுத்தலை இடைவிடாது பேணிவரும் நிலையில், உலகம் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணித்தியாலமும் அணு ஆயுத போரின் விளிம்பை நெருங்கி கொண்டிருக்கி

றது. இப்புவியில் மிகவும் சக்தி வாய்ந்த இராணுவ பலத்திற்கு பொறுப்பான ஒரு மனிதரிடம் இருந்து இதுபோன்ற போர் நாடும் வசனங்கள் வருவது, எத்தருணத்திலும் அணுஆயுத போர் வெடிக்கலாம் என அதிகரித்த அதிர்ச்சியையும் மற்றும் பயத்தையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

டீ-1 ரக மூலோபாய குண்டுவீசிகளின் புகைப்படங்களுடன், கொரியா

வில் அவற்றின் ''இன்றிரவு போரை'' நடத்த இந்த மூலோபாய குண்டுவீசிகள் தயாராக இருப்பதாக அமெரிக்க பசிபிக் கட்டளையகம் வெளியிட்ட ஒரு சேதியை பின் தொடர்ந்து, ட்ரம்ப் அண்மையில் அவரது ட்வீட் செய்தியில், வடகொரியா முட்டாள்தனமாக நடந்து கொண்டால், இராணுவ நடவடிக்கை இப்போது ''தேர்ந்தெடுக்கப்பட்டு, தீர்மானிக்கப்பட்டுள்ளதாக'' குறிப்பிட்டார்.

அதற்கு ஒருசில மணிநேரங்களுக்கு பின்னர், வாய்வீச்சை தீவிரப்படுத்துவதாக ''ஜேர்மன் சான்சிலர் அங்கேலா மேர்க்கெல் தெரிவித்த விமர்சனத்தைக் கண்டிக்கும் வகையில், நான் என்ன கூறினேனோ அந்நிலைமையின் தீவிரத்தை அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன், நான் என்ன நினைத்தேனோ அதையே நான் கூறினேன் என்று அறிவித்தார். வட கொரிய தலைவர் கிம் ஜொங்-யுன் இன்னும் ஒரேயொரு அச்சுறுத்தல் விடுத்தாலும் சரி, அதற்காக அவர் உண்மையிலேயே வருத்தப்படவேண்டியிருக்கும் என்று எச்சரித்து, அமெரிக்க ஜனாதிபதி அவரை மீண்டும் அச்சுறுத்தினார்.

உலக மக்கள் மீது முன்பினும் அதிக அச்சுறுத்தலுடன் போர் அபாயம் அதிகரித்து வந்தாலும், இது வெறுமனே ஓர் அறிக்கை போர் தான், ஏதோவொரு விதத்தில் இது இந்த வீழ்ச்சியிலிருந்து பின்னுக்கு வந்து விடும் என்று கருதுவதும், அல்லது குறைந்தபட்சம் நம்புவதும், இயல்பானதே. ஆனால் முகத்திற்கு முன்னுள்ள யதார்த்தத்தைப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

ட்ரம்ப் நிர்வாகம், உலகம் ஒருபோதும் பார்த்திராததைப் போன்ற ஆத்திரம் மற்றும் சீற்றத்துடன் ''மற்றொரு தரப்பை சுற்றி வளைக்க ஆயத்தமாகி தயாராக நிற்கிறது.

இப்போதைய நிலைமை உலகம் அணுஆயுத போருக்கு மிக நெருக்கத்தில் வந்திருந்த 1962 கியூப ஏவுகணை நெருக்கடியுடன், ஒப்பிடப்பட்டு வருகின்றது. ஆனால் அமெரிக்கத் தலைவரும் சரி ரஷ்யத்தலைவரும் சரி அப்போது ஓர் அணுஆயுத தாக்குதலை கட்டவிழ்த்துவிட விரும்பவில்லை என்பதால் அந்த பதற்றமும் அபாயகரமான மோதலும் இறுதியில் தீர்க்கப்பட்டு, அணு ஆயுத தளவாடங்கள் திரும்பப் பெறப்பட்டன.

இதையே இன்றைக்கும் கூற முடியாது. குறைந்தபட்சம் ஒருபுறம், ட்ரம்ப் நிர்வாகம், உலகம் ஒருபோதும் பார்த்திராததைப் போன்ற ஆத்திரம் மற்றும் சீற்றத்துடன் மற்றொரு தரப்பைச் சுற்றிவளைக்க ஆயத்தமாகி தயாராக நிற்கிறது. அனைத்திற்கும் மேலாக, விரும்பியோ அல்லது விருப்பமில்லாமலோ, ட்ரம்ப் பொறுப்பற்ற விதத்தில் வட கொரியாவை ஒரு மூர்க்கமான இராணுவ நகர்வுக்குள் சீண்டிவிட்டு கொண்டிருக்கிறார்.

அமெரிக்கா பேரம்பேசிய ஒரு தீர்வை அல்லது ஏதோவொரு விதமான முழுமையான வெட்கக்கேடான அடிபணிவை அது விரும்புகிறது என்று கூறுவதைத்தவிர, ட்ரம்ப் இதுவரையில் வடகொரியதலைவர்கிம்இற்குவேறொரு நம்பிக்கையும் உறுதியளிக்கவில்லை. அதிகரித்தளவில் மோதலுக்கான சாத்தியக்கூறு தவிர்க்கவியலாததாக தெரிகின்ற நிலையில், இராணுவ தர்க்கமே அதிகரித்தளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. பெரிதும் ஸ்திரமற்ற பியொங்யாங் ஆட்சி, ஒரு பெரும் அமெரிக்கத் தாக்குதல் உடனடியாக நிகழக்கூடுமென நம்புகின்றபட்சத்தில், பதிலடி கொடுப்பதற்கான அதன் தகைமை முழுமையாக அழிக்கப்படாமல் இருக்க அதன் சொந்த முன்கூட்டிய தாக்குதலைத் தொடங்க முடிவெடுக்கலாம்.

(கேள்வி தொடரும்)

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சீகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சீறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

80

அத்தியாயம் - V

இறுதியான சவால்

''தூரம் செல்லச் செல்ல இருள் கப்பியது. கதகதப்பும் குறைந்து குளிர் மேவியது. குளிர் காற்று கடலைக் கடைய மலையும் மடுவுமாக கடல் ஏறி இறங்கியது. கருமேகம் வானத்தில் மூட்டம் கட்டி, வரவரக் கனதி பெற்றது. பார்வைக்கு எட்டா இடமெல்லாம் காரிருள் கப்பியது. சிறு ஒளிக்கீற்றுக் கூட எமக்கு நம்பிக்கை தரும் வகையில் எங்கும் காணோம். இதுவரையில் நாம் குறைந்தது நான்கு மணிநேரம் பயணம் புரிந்திருந்தோம். பொறுமை இழந்த வளாக ''இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டும்?'' என்று கேட்டேன். ''அதிக தூரமில்லை அன்ரி'' என்று ஓட்டி பொய் சொன்னார். எம்மை எதிர்நோக்கிய பிரச்சினைகளில், ஒங்கி எழும் கடல் ஒன்று மட்டுமே. இயந்திரங்களில் ஒன்று பணி புரிந்து களைப்படைந்து இருமிவிட்டு ஓய்ந்து விட்டது. மீந்திருந்த ஒரு எட்டுப் பரிவலு இயந்திரமும் நினைத்துப் பார்க்க முடியாத பேரண்ட பணியை நிறைவேற்றுமா என்று மனதுக்குள் கேட்டுக் கொண்டோம். வடமராட்சியில் இத்தனை இடருக்கும் முகம் கொடுத்துத் தப்பிப் பிழைத்த நாம் சமுத்திர நடுவில் இருளின் தனிமையில் உயிரிழப்பது எமது விதியாக இருக்கமாட்டாது என்ற நம்பிக்கை எமக்கு இருந்தது. ஒட்டிக்கு மட்டுமே விண்மீன்களை வைத்துத் திசையை அறிய முடியுமாக இருந்தது. ஆகவே எந்தத் திசையில் செல்கிறோம், தரையைச் சென்றடைய எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதெல் லாம் அவருக்குத்தான் தெரியும். பெரிய அலைகள் எம்முன்னே எழுந்து படகின் மீது விழுந்தன. படகுக்குள் சிறு குளங்கள் உருவாகின.கையில் கிடைத்த பாத்திரம் எதையும் எடுத்து படகில் இருந்த நீரை வெளியே இறைத்து, படகின் பாரத்தைக் குறைத்தோம். திடீரென்று ஒரு இயந்திரம் படகிலிருந்து கழன்று சென்றபோது நாம் அதிர்ந்து போனோம். படகு நின்று விட்டது. பழுதடைந்த இயந்திரமா, வேலை செய்து கொண்டிருந்த இயந்திரமா என்ற அச்சம் நெஞ்சைப் பிசைந்தது. ஓட்டி இயந்திரத்தை இயக்க முற்பட்ட போது மூச்சைப் பிடித்துக்கொண்டு நின்றோம். அது இயங்கி ஓடத் தொடங்கியது. கடலிலே மூழ்கியது பழுதடைந்த இயந்திரமே என்பது நிம்மதியைத் தந்தது. நிம்மதியோடு உட்கார்ந்தோம். நீண்ட நேரமாக சமுத்திரத்துடனும் கால நிலையுடனும் போராடிக் கொண்டிருந்தோம். பல மணிநேரத்துக்குப் பின் இனி வெளியே காணப்படப்போகிறோம் என்ற அச்சம் தாவியது.

இந்தக் கடற்பயணம் இவ்வளவு நீளமாக இருக்கும் என்று எம்மில் யாரும் எதிர்பார்க்கவில்லை. மெல்லிய பருத்தி ஆடைகளையும் றபர் செருப்புகளையும் அணிந்திருந்தோம். யாழ்ப்பாண வெக்கைக்கு அது பொருந்தும். ஆனால் இந்தப் பயணத்துக்கோ கால நிலைக்கோ அல்ல. இரவு குளிர் பரவியபோதே எமது மூடத்தனமும் புரிந்தது. கடல்கூட இரக்கமற்றதாக எமது கண்முன்னேயே உயர உயர எழுந்து உங்களை விழுங்கப் போகிறேன் என்பதுபோல மிரட்டிக் கொண்டிருந்தது. பல மணிநேரம் கடலில் கழித்து விட்டோம். அடிக்கும் அலைகள் படகை அலைத்தன. கடல் நீரில் தெப்பமாக நனைந்திருந்தோம். அடிக்கடி வீசும் காற்று ஈர உடையில் படும்போது, குளிர் தாங்க முடியாததாகி விட்டது. படகின்பக்கவாட்டில்நான்அமர்ந்திருந்து அடிக்கும் அலைகளை யும் காற்றையும் தாங்கிக் கொண்டேன். என்னால் குளிர் தாங்க முடியவில்லை. பல் கடகடவென்று தந்தியடித்தது. படகின் பக்கவாட்டிலிருந்து எழுந்திருக் கக் கூட முடியாது படகைப் பிடித்தபடி உறைந்து போய் உட்கார்ந்திருந்தேன். அந்தப் பிடி, வாழ்வையும்விடாது பிடித்திருக்கும் என் நிலைப்பாட்டையே பிரதிபலித்தது. அதே நிலையில் நான் உயிரோடுதான் இருக்கிறேன் என்பது எனக்குத் தெரிந்தது. பல் நடுங்குவதைக் கட்டுப்படுத்த முடியவில்லையே என்ற உணர்வும் நாம் உயிரோடு இருப்பதை உறுதிப் படுத்தியது. பாலாவும் குளிரால் நடுங்கினார். ஈரமும் தலைச் சுற்றும் இந்தப் பயணத்துக்கு முடிவே இல்லை என்று கூறின. நேரம் என்பது அநாதியாகப்பட்டது. நான்கு மணிக்குக் கூடுதலாகக்கடலில் இருந்து விட்டோம். ஆகவே எமது பயணம் அநேகமாக முடியப் போகிறது என்று நினைத்தோம். இன்னும் அரைமணி நேரம், அரைமணி நேரம் என்று ஓட்டி தொடர்ந்து பொய் சொன்னார். பொங்கும் கடலிலிருந்தும் நடுங்கும் குளிரில் இருந்தும் எப்படி வெளியேறப் போகிறோம் என்ற ஒன்றைப் பற்றியே சிந்திக்க முடிந்தது. அடிவானத்தில் ஒளிக்கற்றை ஒன்று தோன்றுவதை ஓட்டி ஒருவர் எனக்குச் சுட்டிக் காட்டினார். தமிழ்நாட்டுக் கரையோரக் கிராமங்களின் வெளிச்சங்கள் அவை . தூரத்தில் தெரிந்தன. நம்பிக்கை இழந்தவர்களுக்கு தெய்வ தரிசனம் போல அது இருந்தது. இன்னும் சில நிமிடத்தில் கடலிலிருந்து வெளியேறிக் கதகதப்பைத் தேடிக் கொள்ளலாம் என்று கருதினேன். ஒளியைக் காட்டிய அந்தத் தம்பி நாம் அதைச் சென்றடைய பல மணி நேரம் பிடிக்கும் என்பதை எனக்குக் கூறவில்லை. கடல் பயணமும் எமக்குப் புதிது. கடலில் தூரத்தை அளக்கும் ஆற்றலும் குறைவு. நேரம் போகப் போகத்தான் இரவில் வழிகாட்டும் அந்தக் கலங்கரை விளக்கை சென்றடையும் முன் பல மணி நேரம் குளிரில் நடுங்க வேண்டியது தான் என்பதை புரிந்து கொண்டோம். ஆனாலும் நம்பிக்கை மீண்டும் எம்முன்னே துளிர் விடத் தொடங்கியிருந்தது.

> பல மணிநேரம் கடலில் கழித்து விட்டோம். அடிக்கும் அலைகள் படகை அலைத்தன. கடல் நீரில் தெப்பமாக நனைந்திருந்தோம். அடிக்கடி வீசும் காற்று ஈர உடையில் படும்போது, குளிர் தாங்க முடியாததாகி விட்டது. படகின் பக்க வாட்டில் நான் அமர்ந் திருந்து அடிக்கும் அலைகளையும் காற்றையும் தாங்கிக் கொண்டேன். என்னால் குளிர் தாங்க முடிய வில்லை. பல் கடகட வென்று தந்தியடித்தது. படகின் பக்கவாட்டி லிருந்து எழுந்திருக்கக் கூட முடியாது படகைப் பிடித்தபடி உறைந்து போய் உட்கார்ந்திருந் தேன். அந்தப் பிடி, வாழ் வையும் விடாது பிடித்தி ருக்கும் என் நிலைப் பாட்டையே பிரதிபலித்தது.

கரையை அண்மிக்கத் தொடங்க இந்தியக் கடற்படையினதும் கரைக் காவல் பிரிவினதும் படகுகள் வரலாம் என்பதால் நாம் விழிப்போடும் நோட்டமிட வேண்டும் என்ற உணர்வு தலைதூக்கியது. ஆனால், நாம் பாதுகாப்பான கதகதப்புப் பெறப் போகிறோம் என்ற இனிய உணர்வு எமது அச்சத்தை ஓரம் கட்டியது. நான் குளிரால் உறைந்து போயிருந்தேன். காவல் உலாப் படகு வருகிறதா என்று பார்ப்பதற்கு தலையைத் திருப்புவதே கடினமாக இருந்தது. இனி விடியும்முன் நாம் போய்ச் சேர்ந்து விட வேண்டும் என்ற அவசியமும் இருந்தது. விடிந்த பின் சென்றால் எளிதாக காவல் படகுகளின் கண்ணில் தட்டுப்பட்டு கைதாகி விடுவோம்.

இரண்டு ஓட்டிகளுக்கும் இந்தக் கடற்பகுதி பரீட்சயமாக இருந்தது. கரைக் காவலர்கள் சுங்கத்துறை உலா அணியும் அதிகாலையில் நடமாடாத பகுதிகளைத் தேர்ந்து பத்திரமாகப் படகுகளை அங்கு செலுத்த அவர்களுக்குத் தெரியும். நல்ல காலமாக படகு எதையும் கடலின் இந்தப் பகுதியில் நாம் காணவில்லை. ஆனாலும், அசட்டையாக இருந்து விடாது எமது பயணத்தின் இறுதிக் கட்டத்தில் கொடிய இடையூறு எதுவும் நேர்ந்து விடாது, எங்கள் பார்வையைச் சுழல விட்டுக் கொண்டிருந்தோம். ஒரு சில மழைத் துளிகள் விழுந்தன. உடனே எச்சரிக்கை அடைந்தோம். கருமேகங்கள் இப்பொழுது ஓர் உண்மையான அச்சுறுத்தலாக அமைந்தன. தரையை அடையும் வரை மழை வரக் கூடாது என்று விரும்பினோம். அடிக்கும் அலைகள் ஊடாக கரைக் கடலுக்குள் நுழைந்தோம். குளிரால் விறைத்திருந்த நாம் படகில் இருந்து வெளியே இறங்கி கணுக்கால் புதையும் சேற்றுக்குள் நின்றோம். அந்த நேரம் வானம் பிய்த்துக் கொண்டு பொழிந்தது. மழையில் தெப்பமாக நனைந்தபடி சேற்றுக்குள் காலை இழுத்தபடி எமக்கு வாழ்வளித்த படகில் இருந்து எட்டத்தே நகர்ந்தோம். கரையோரம் நின்ற படகை பின்னே இருந்து குமுறியபடி ஓங்கி வந்த ஓர் அலை தலைகீழாக கவிழ்த்தது. பத்து மணி நேர மறக்க முடியாத கடல் அனுபவம் அந்தப் படகுக் கவிழ்ப்போடு முடிய, எமது புதிய தலைமறைவு வாழ்க்கையும் ஒளித்தோடு படலமும் அந்த இடத்தில் தொடங்கியது.

(தொடரும்...)

சுடுகாட்டு கோலத்தில் மண்டைதீவு கிராமம்

மண்டைதீவு கை.பேரின்பநாயகம்

(நேற்றைய தொடர்ச்சி..)

பியதாச இரண்டு அடிமுன் வந்து துவக்குடன் வந்தவர்களை பார்த்து 'ஏ வரேங்' என்று எச்சரித்தான். அவன் தான் தாக்குதல் படைத் தளபதியாக இருக்க வேண்டும். எந்த விதமான அசம்பாவிதமும் கோவிலுக்குள் நடக்க வில்லை. கைதுகளைத் தவிர.

வெளியில் இராணுவத்தின் வெடிச் சத்தம் நின்றதும் சகல சைக்கிள் வண்டி களும் காணாமல் போயின. இராணு வத்தினர் களைப்பு மாறமுன் ஊர் பார்க்க சைக்கிள்களுடன் புறப்பட்ட னர். தம்பி ஆமி கிராமத்தை Loot பண்ணுதோ எனக் கேட்டார். அதற் குப் பதில் அடுத்தநாள் காலைதான் கிடைத்தது. ஓர் அழகான நடுத்தர அதிரடிப்படைக் கப்டன் வந்தார். தன்னை அறிமுகப்படுத்தினார். தான் தான் படைக்குப் பொறுப்பு என்றார். தான் மண்டைதீவுக் கிராமத்தைப் பொறுப்பேற்றுவிட்டேன் என்றும் வடக்குக் கிழக்கு, தெற்கால் உள்ளவர் கள் வீடுகளுக்கு செல்ல முடியாதென் றார்.

மேற்கால் போகலாம் சில நாள்களுக் குப் பின் தான் சாத்தியம் என்றார். மேற்கில் சில வீடுகளும் கொஞ்சப் பனைகளும் வயலும் சுடலையும் இருந் தன. அதற்கப்பால் கடலும் அல்லைப் பிட்டிக் கடற்கரையும் இருந்தன. தொடர்ந்து கைதுகள் இடம்பெற்றன. சிலர் காட்டிக்கொடுப்பதற்காக கொழும் பில் இருந்து கூட்டி வரப்பட்டிருந்தனர்.

மூன்று நாள்களாக அன்னம் தண்ணி கிடைக்கவில்லை. கோவில் கிணற்றின் உப்புத் தண்ணீர் வற்றிப் போனது. விடாய் தாங்க முடியாது குடிக்க வேண்டிய தாயிற்று.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி கிராமங்கள் உயிரோடு புதைக்கப்பட்ட கோட்டை படை நடவடிக்கையின் 27 ஆவது ஆண்டின் நினைவு நாள்

மாற்று இயக்கமோ தெரியாது. நல் லாய் தமிழ் கதைத்தனர்.

கோவில் சாவீடாக மாறியிருந்தது. நித்திரை எவருக்கும் வரவில்லை. அழுதுகுழறி உறவுகளை பறிகொடுத்த வர்கள் களைத்துப் போயினர்.

ஒரே ஓர் ஆமிக்காரன் வெளியில் துவக்கோடு காவலுக்கு நின்றான். ஏனையவர்கள் கிராமத்தை சூறை யாடி னர் என்று அவர்களின் கைக ளில் வெட்டி போடப்பட்டு இருந்த காப்புகளும் தாலிக் கொடிகளும் சங் கிலிகளும் அட்டியலும் மினுங்கின.

உற்றுக் கவனித்த பொழுது துப் பாக்கி குழல் கோவில் கேற்றை உரசி உரசி சப்தம் போட்டது. தலையைக் குனிந்தபடி இருப்பது நல்லது எனப் பட்டது.

மூன்று நாள்களாக அன்னம் தண்ணி கிடைக்கவில்லை. கோவில் கிணற்றின் உப்புத் தண்ணீர் வற்றிப் போனது. விடாய் தாங்க முடியாது குடிக்கவேண்டியதாயிற்று. மூன்றாம் நாள் காலை சில கறிப் பக்கற்றும் இரண்டு விசுக்கோத்துப் பெட்டியும் வந்து விழுந்தன. ஒருவரும் எடுக்க வில்லை.

எடுக்குமாறு வற்புறுத்தப்பட்டவர் கள் எடுக்கச்சென்றபோது இளநீர்க் கோம்பைகள் அவர்கள் மீது வீசப்பட் டன. துவேசம் தலைவிரித்தாடியது. சில தமிழ்க் குழுக்கள் (அவர்களுடன் வந்தவர்கள்) ஆமிக்காரரை சமாதானம் செய்துகொண்டு கதைப்பது தெரிய வந்தது. மூன்றாம் நாள் இரவு மழை பெய்தது.

மலசலப் பிரச்சினையால் கோவில் வீதி கொஞ்சம் மணத்தது. ஆமிக்கார ருக்கும் அது தெரிந்தது.

நாலாம் நாள் காலை வீடுகளுக்கு போகாது அல்லைப்பிட்டி ஊடாக மண் கும்பான் போகுமாறு பணிக்கப்பட் டோம்.

மண்டைதீவின் கிழக்கு கடற்கரை யைத் தெற்குப்புறமாக அடைந்த சிலர் பங்கரில் வைத்துப் பலரைக் கொன்றனர். விநாசித்தம்பி என்ற தொண்ணூறு வயது முதியவரும் இவர்களிடம் இருந்து. தப்பவில்லை. ஒரே நாளில் மண்டைத் தீவு கிராமம் முச்சுடுகாடாக மாறியது. அவர்கள் தங்கி யிருக்கும் நாளில் நடக்கும் அநியாயங் களை மக்கள் அறியாதிருந்தனர்.

அவர்களின் வாழ்வாதாரமான வெள் ளாடுகள் ஒரு மாத காலத்துள் தின்று தீர்க்கப்பட்டன. கோழிகளும் கோழிப் பண்ணைகளும் கூட காணாது போயி ருந்தன. இங்கு வந்த இராணுவத்தினர் மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்தனர். Head Office மட்டு மல்ல சித்திரவதைக் கூடமும் இது தான். தெற்காக இருந்த Primary மற்றும் திறந்த வெளி அரங்கமும் இரத்தக் கறைகளால் நாற்றம் அடித் தன. கிழிந்த லுங்கிகளும் சறங்களும் சேட்டுகளும் கட்டி தொங்கவிடப் பட்டன இரத்தக் கறைகளுடன்.

இந்த இடத்தில் தான் கைது செய் யப்பட்டவர்கள் பொல்லுகளால் ஒரு வரை ஒருவர் அடித்துக் கொள்(ல்)ளு மாறு வற்புறுத்தப்பட்டனர். மெதுவாக ஒருவரை ஒருவர் தட்டியவர்களுக்கு எப்படி இறுக்கி அடிப்பது என பாடம் நடத்தினர். ஆக்கிரமிப்பாளர் அடித்து முறிக்கப்பட்டவர்கள் புல்டோசரில் விலங்கிட்டு கொண்டுசெல்லப்பட்ட னர். திரும்பி வரும்போது கைவிலங்கு கள் மட்டுமே திரும்பி வந்தன.

குற்றுயிரும் கொலை உயிருமாக இவர்கள் உயிருடன் போட்டு புதைத்த இடங்களில் கிணறுகளில் தடயங்கள் இருந்தன. திடீரென மண்டைதீவை விட்டு விலகுமாறு ஓடர் வந்தபொழுது (செப்ரெம்பர் 25, 1990) 14 இளை ஞர்கள் இவர்களிடம் மிஞ்சியிருந்தனர்.

வேலணை வைரவர் கோவில் சந்தி யில்இறக்கப்பட்டவர்கள்காலைக்கடனை சாக்காக வைத்து பனைகளூடாக சாட் டியை வந்தடைந்தனர். முஸ்லிம்களின் மசூதிகள் இருந்த இடத்திலே மண்டை தீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் மக்கள் அகதிகளிலும் கேவலமான நிலையில் தங்கியிருந்தனர்.

உதவி நிறுவனங்கள் ஒன்றும் அங்கு வரவில்லை. அவர்கள் சொன்னபடி அப் படி சொல்லித்தான் கோவில்களில் இருந்தவர்களுக்கு UNO வருது, UNHCR வருது, UNISEF வருது என்று சொல்லி அனுப்பியிருந்தனர். ஒரு மண்ணாங்கட்டியும் வந்து சேர

வில்லை.

பனங்காய் சீசன் அதனாலும், கூட்டுற வுக் கடைகளுக்கு புங்குடுதீவு ஊடாகக் கிடைத்த பொருள்களும் உயிரைப் பிடித்தன. தீவகத்தில் இருந்த ஒரேயொரு விதானை மட்டுமே இடம் பெயர்ந்த வர்களோடு களத்தில் நின்றார்.

ஒரு மாதத்தால் இலங்கைப் படை கள் கிடைத்தவற்றுடன் சேதமின்றி திரும்பி விட்டன. ஆனால், மக்கள் பொருள்களும் திரும்பவில்லை. அங்கு இல்லை. அவர்கள் ஒரு றிப் சுவிச் கூட விடாது உடைத்தெடுத்துக் கொண்டு சென்றுவிட்டனர். இதில் என்பதில் இருந்தே இந்தப் பகுதி மக்களின் இழப்பைக் கணிக்கலாம்.

ஒரு வருடத்தால் மீண்டும் இராணு வம் திரும்பி வந்தது. அது சுவர்களில் எழுதி வைத்தபடி எஞ்சியிருந்த கொஞ்ச மக்களும் உடைந்து கிடந்த பண்ணைவீதியூடாகக் கடந்து தமது தாயகத்தை விட்டு கண்ணீரும் கம் பலையுமாக நீங்கிச்சென்றனர். பலஸ் தீன அகதிகளைப் போல அவர்கள் ஐந்து வருடங்களாக முகாம்களில் வசித்தனர்.

அவர்களது வரலாறு யாழ்ப்பாணம் தொடங்கி சாவகச்சேரி ஊடாக வன் னிப் பெருநிலத்தின் நல்லூர்க் கிராமம் ஊடாக நீண்டது. இங்கு தொலைந்த உறவுகளிலும் பார்க்க அங்கு தொலைந்த உறவுகள் அதிகம்.

நம்பியிருந்தவர்களும் தேசங்களும் நட்டாற்றில் விட்டதால் முல்லைத்தீவு, புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால் முற் றுகை என சோக வரலாற்றுப் பதிவு களை எழுதி வைக்கப் போகின்றவர்கள் யார்?

(முற்றும்)

மாகாண சபையை ஏனையவர்களின் விருப்புக்காக முன்னதாக கலைப்பதற்கு இடமளிக்க முடியாது!

மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவிப்பு

மாகாண சபையை ஏனையவர்களின் விரும்பங்களுக்கு அமைய முன்னதாக கலைப்பதற்கு இடமளிக்க முடியாது என மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

20 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் மேல் மாகாண சபையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட அமைதியின்மையால் சபை அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்த அமைதியின்மையின் போது செங்கோலை பறித்தெடுப்பதற்குக் கூட்டு எதிரணியினர் மேற்கொண்ட முயற்சியால் பெரிய குழப்ப நிலையும் அங்கு ஏற்பட்டிருந்தது.

மாகாண சபைத் தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்தும் வகையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள 20ஆவது அரசமைப்புதிருத்தம் தொடர்பில் விவாதிப்பதற்கென மேல் மாகாண சபையின் விசேட அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த திருத்தத் தீர்மானம் குறித்த முடிவை இன்றைய தினத்திற்குள் அறிவிக்குமாறு ஆளுநர் சபைக்கு பணித்த நிலையில், நேற்றைய தினம் அது குறித்து விவாதிக்க முடிவு செய்யப்பட்டிருந்தது.

எனினும், இந்த சட்டமூலம் மீதான வாக்கெடுப்புக்கு முன்னதாகக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை மேல்மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய கூட்டியிருந்தார்.

அத்துடன், இந்தச் சட்டத் திருத்தத்தை மீண்டும் சபையில் சமர்ப்பிக்கவேண்டும் எனவும் அடுத்த அமர்வில் அது குறித்து விவாதிக்க முடியும் எனவும் முதலமைச்சர் சபைக்கு அறிவித்தார்.

முதலமைச்சரின் இந்தத் தீர்மானத்திற்கு எதிர்ப்பு வெளியிட்ட கூட்டு எதிரணி உறுப்பினர்கள், இந்தத் திருத்தம் குறித்து இன்றே விவாதம் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினர்.

இதனையடுத்து அரசு மற்றும் எதிர்க் கட்சியின் உறுப்பினர்களுக்கு இடையே கடுமையான வாதப் பிரதி வாதங்கள் ஏற்பட்டிருந்தன.

இதன்போது செங்கோலை பறித்தெடுப்பதற்கு கூட்டு எதிரணி உறுப்பினர்கள் அதன் போது சபையில் பெரும் குழப்பான நிலைமை உருவாகியிருந்தது.

இந்த அமைதியின்மை நீடித்தநிலையில் மேல் மாகாண சபையின் அமர்வை எதிர்வரும் நான்காம் திகதி வரை ஒத்தி வைப்பதாக அவைத் தலைவர் அறிவித்தார்.

இந்த அமர்வின் போது ஏற்பட்ட அமைதியின் மைக்கான காரணத்தை மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தினார் அதன்பேதே மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

20 ஆவது அரசமைப்பு திருத்தம் தொடர்பில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அது தொடர்பில் நான் ஆராய்ந்தேன். அதில் சில திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். அது தொடர்பில் நான் ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தினேன்.

இந்த நாட்டின் பொறுப்பு மிக்க அதிகாரிக்கு தெளிவுபடுத்தினேன். இந்த திருத்தம் நிறைவேற்றப்பட்ட நிலையில், முதலமைச்சரின் அதிகாரங்கள் இல்லாமல் போகும். ஆளுநருக்கு இருக்கும் அதிகாரங்கள் இல்லாமல் போகும்.

அதேபோன்று ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரமும் இல் லாமல் போகும். மாகாண சபை தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் நேரடியாக நாடாளுமன்றத்திற்குச் செல்லும். அரசமைப்பில் மாகாண சபைக்கு உயர் மட்டத்தில் தேசிய நிறுவனம் என்ற வகையில் இருக்கும் அதிகாரங்கள் நாடாளுமன்றத்திற்கு வழங்க முடியாது. அது மிகவும் தெளிவானது.

அது தொடர்பில் கருத்துக்களைத் தெரிவித்தோம். மாகாண சபைத் தேர்தல்களை தனித் தனியே நடத்துவதற்கு பெரும்பாலான மக்கள் விரும்பவில்லை. அது தொடர்பில் விரும்பம் இருக்கவில்லை.

நல்லாட்சி அரசு, மாகாண சபைத் தேர்தலை ஒரே தினத்தில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளமைக்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்க வில்லை. ஆனால், மாகாண சபையை ஏனையவர்களின் விரும்பங்களுக்கு அமைய முன்னதாகக் கலைப்பதற்கு இடமளிக்க முடியாது.

எங்களுக்கு 2019 ஏப்ரல் 20 ஆம் திகதி வரை சபையை நிர்வகிப்பதற்கு அதிகாரம் இருக்கின்றது. ஆகவே இதனை கலைப்பதற்கான தேவை இல்லை. ஆகவே இந்த சட்டமூலம் தொடர்பான திருத்தங்களை ஆராய்ந்து அதனை ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இதற்கென ஒரு வார கால அவகாசத்தை அனைத்து உறுப்பினர்களிடமும் நான் கோரியிருந்தேன். சிலர் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை எனத் தெரிவித்தார்.

20 ஆவது அரசியலமைப்பு திருத்தம், நாட்டு மக்களுக்கே பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அதற்கு எதிராக எதிர்வரும் காலங்களிலும் தாம் வாக்களிப்போம் எனக் கூட்டு எதிரணியை பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை உறுப்பினர் உபாலி கொடிகார குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மேல் மாகாண சபைக்கு அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தைச் சமர்ப்பித்து அனுமதியை பெறும் போது எமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, அதேபோன்று ஹெல உறுமய ஆகியன ஒன்றிணைந்தே இந்த யோசனையைத் தோற்கடித்தோம்.

இந்த யோசனையால் பாதிக்கப்படுவது இந்த நாட்டு மக்கள், பொதுமக்களுக்கு உரிய வாக்களிக்கும் உரிமை, வாக்களிக்கும் அதிகாரம் என அனைத்தையும் நாடாளுமன்றத்திற்கு வழங்குவதற்கே இந்தச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டது.

ஆகவேதான் இந்த சட்டமூலத்திற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற வகையில் எதிராக வாக்களித்தோம். நாம் எதிர்காலத்திலும் இந்த அனைத்து சட்டமூலத்திற்கு எதிராகவும் வாக்களிப்போம். மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திர முன்னணியில் போட்டியிட்டு தெரிவான 19 பேர் இதற்கு எதிராக வாக்களித்துள்ளோம் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (க)

வடக்கில் சரியாக சட்டம் நடைமுறையில் இல்லை!

விமல் வீரவன்ஸ குற்றம் சாட்டுகிறார்

கொழும்பு, ஓக. 30

வடக்கில் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் நிலவும் நிலையில், அங்கு சரியாக சட்டம் நடைமுறைப்படுத்தப் படவில்லை என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ குற்றம் சாட்டியுள்ளார்.

புதியநீதிஅமைச்சரின் உதவியுடன் கூட்டு எதிரணியின் 10 உறுப்பினர்களை கைதுசெய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை நடத்துவதற்கு முன்னர் இந்த கைது நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கேகாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இதனை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டைகடன்சுமையில் தள்ளிவிட்டார் என தெரிவித்துக்கொண்டு நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உலகை வலம் வருகிறார்.

இவ்வாறான நிலையிலேயே அரசு புதிய நீதி அமைச்சராக பதவியேற்றுள்ள தலதா அத்துகோரளவின் உதவியுடன் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அழுத்தம் கொடுத்து கூட்டு எதிரணியின் 10 உறுப்பினர்களை கைது செய்யத் திட்டமிட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

தெஹிவளை மிருகக் காட்சிசாலை; பார்வையிடும் நேரம் அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 30

தெஹிவளை தேசிய மிருகக் காட்சிசாலையைப் பார்வையிடும் நேரம் அதிகரிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி முதல் மிருகக் காட்சிசாலையை பார்வையிடும் நேரம் 5 மணித்தியாலத்தினால் நீடிக்கப்படவுள்ளது என வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்பொழுது மிருகக்காட்சிச்சாலையைப் பார்வையிடும் நேரம் காலை 8.30 தொடக்கம் மாலை 6 மணிவரை என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

இந்த நேர அட்டவணையை செப்ரெம்பர் 09 ஆம் திகதியிலிருந்து வாரத்தின் எல்லா நாள்களும் காலை 7மணியிலிருந்து இரவு 10 மணி வரை நீடிக்கவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தெஹிவளை மிருகக்காட்சிசாலையைப் பார்வையிட வருவோரின் வேண்டுகோளுக்கிணங்கவும் நாட்டின் தூரப் புறங்களிலிருந்து வருவோரின் சௌகரியத்துக்காகவும் இந்த நேர நீடிப்புச் செய்யப்படுவகின்றது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசியாவிலுள்ள பழைமை யான மிருகக்காட்சிச்சாலைகளில் தெஹிவளை மிருகக் காட்சிச்சாலையும் உள்ளடங்குகிறது. 11 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 3 ஆயிரம் உலகின் அரியவகை விலங்கினங்களைக் கொண்டுள்ள இந்த மிருகக் காட்சிச்சாலையைப் பார்வையிட வருடாந்தம் சுமார் 15 லட்சம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பார்வையாளர்கள் வருகை தருகிறார்கள் என்று மிருகக் காட்சிச்சாலை நிர்வாகம் தெரிவிக்கின்றது.

எடப்பாடி அரசு பெரும்பான்மையை இழந்தது என ஜனாதிபதியிடம் நேரில் சென்று முறையிட முடிவு!

தமிழக ஆளுநரின் மௌனத்துக்கு எதிராக தி.மு.க. உட்பட 5 கட்சிகள் போர்க்கொடி

சென்னை, ஓக. 30

தமிழகத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான மாநில அரசு சட்டசபையில் பெரும்பான்மையை இழந்துவிட்டமையை நேரில் சென்று சுட்டிக்காட்சியும் அது தொடர்பில் உரிய நடவடிக்கை ஏதும் எடுக்காமல் மௌனம் சாதிக்கும் தமிழக ஆளுநருக்கு எதிராக புதுடில்லி சென்று குடியரசுத் தலைவரிடம் நேரடியாக முறையிடவும், ஆளுநருக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்கும்படி அவரை வேண்டவும் தி.மு.க. உட்பட நான்கு கட்சிகள் தீர்மானித்துள்ளன.

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமிக்கு 21 அ.தி.மு.கழக எம்.எல்.ஏ.க்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள்.

டி.டி.வி.தினகரனின் ஆதரவாளர்களான அவர்கள் ஓ.பி.எஸ். அணியை மீள எடப்பாடி அணி இணைத்துக் கொண்டதைக் கண்டித்துப் போர்க்கொடி தூக்கியுள்ளனர். ஆட்சியைக் கவிழ்ப்பது தங்கள் நோக்கம் அல்ல என்று தெளிவு படுத்தியுள்ள அந்த 21 எம்.எல்.ஏ.க்களும், முதலமைச்சர் பதவியில் இருந்து எடப்பாடி பழனிச்சாமி விலக வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார்கள்.

கடந்த வாரம் அந்த 21 எம்.எல்.ஏ.க்களில் 19 பேர் தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவைச் சந்தித்து எடப்பாடி பழனிசாமிக்கு கொடுத்து வரும் ஆதரவைத் தாங்கள் வாபஸ் பெறுகின்றனர் எனக் குறிப்பிட்டு, தனித்தனியாக கடிதம் கொடுத்தனர். இதையடுத்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி சட்டசபையில் பெரும்பான்மை ஆதரவுப் பலத்தை இழந்து விட்டார் என்ற சர்ச்சை எழுந்துள்ளது.

அ.தி.மு.க.வின் மொத்த எம்.எல்.ஏ.க்களான 134 பேரில் 21 பேர் டி.டி.வி. தினகரனை ஆதரிப்பதால் எடப்பாடி பழனிச்சாமிக்கு 113 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவே உள்ளது. இது பெரும்பான்மை பலத்துக்குத் தேவையான 117-க்கும் நான்கு குறைவாக இருக்கிறது. அ.தி.மு.க. ஆதரவுடன் வெற்றி பெற்றுள்ள கருணாஸ், தனியரசு, தமிமுன் அன்சாரி ஆகியோரும் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராகவே உள்ளனர். எனவே சட்ட சபையில் பெரும்பான்மை பலத்தை முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி இழந்து விட்டார் என எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி, தமிழக அரசைக் கலைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தி.மு.க. - காங்கிரஸ், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகள் சார்பில் ஆளுநர் வித்யாசாகர் ராவை சந்தித்து மனு கொடுக்கப்பட்டது. அந்த மனுவில், எடப்பாடி பழனிசாமி தனக்கு இருக்கும் பெரும்பான்மையைச் சட்டசபையில் நிரூபித்து காட்ட ஆளுநர் உத்தரவிட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது..

எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்று ஆளுநர் வித்யாசாகர் ராவ், சட்டசபை கூட்டத்தில் பெரும்பான்மையை நிரூபித்து காட்டுமாறு எடப்பாடி பழனிசாமிக்கு உத்தரவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஆளுநர் வித்யாசாகர் ராவ் இந்த விவகாரத்தில் எந்தவித உத்தரவையும் வெளியிட வில்லை. தொடர்ந்து மௌனமாகவே உள்ளார்.

தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் 19 பேர் கொடுத்த கடிதத்தையோ, தி.மு.க., காங்கிரஸ், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் கொடுக்கப்பட்ட கடிதங்களையோ ஆளுநர் வித்யாசாகர் ராவ் கண்டு கொள்ளவில்லை. தி.மு.க. மனுவை ஏற்றுக் கொண்டாரா அல்லது நிராகரித்து விட்டாரா? என்று கூட எதுவுமே அவர் தரப்பில் இருந்து தெரிவிக்கப்படவில்லை.

இதையடுத்து இந்த விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தைச் சந்தித்து பேச தி.மு.க. முடிவு செய்துள்ளது. தி.மு.க.வுடன் காங்கிரஸ், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய 4 கட்சிகளின் பிரதிநிதிகளும் சேர்ந்து ஜனாதிபதியை சந்தித்து மனு கொடுப்பார்கள் என்று தெரிய வந்துள்ளது. இதற்காக 5 கட்சிகள் குழு சார்பில் நேரம் கேட்கப்பட்டுள்ளது.

நாளை (வியாழக்கிழமை) தங்களை சந்திக்க நேரம் ஒதுக்கி தர வேண்டும் என்று 5 கட்சிகள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியை சந்திக்கும் வகையில் அவர்கள் கொடுக்கும் மனுவில், எடப்பாடிபழனிச்சாமிபெரும்பான்மையை நிரூபித்து காட்ட ஆளுநர் உத்தரவிடும் வகையில் தாங்கள் அவரை அறிவுறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்க திட்டமிட்டுள்ளனர். இது தொடர்பாக தி.மு.க.வைச் சேர்ந்த நாடாளுமன்ற மேல் சபை எம்.பி. திருச்சி சிவா கூறியவை வருமாறு:-

தமிழ்நாட்டில் தற்போது எந்த அரசும் இல்லை. அ.தி.மு.க. தன்னையும், தனது அரசையும் காப்பாற்ற போராடிக் கொண்டிருக்கிறது. மக்கள் பிரச்சினைகள் பற்றி ஆட்சியாளர்கள் கவலைப் பட்டவர்களாகத் தெரியவில்லை.

இந்த அரசு மீது ஆளுநர் முன்பே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். தினகரனின் 19 எம்.எல்.ஏ.க்கள் தனித்தனியாக கடிதம் கொடுத்த உடனே அதை ஏற்று சட்டசபையை கூட்ட ஆளுநர் உத்தரவிட்டிருக்க வேண்டும். - என்றார் அவர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எம்.பி. டி.ராஜா கூறுகையில் -

''அ.தி.மு.க. இரு அணி தலைவர்களின் கையை பிடித்து சேர்த்து வைக்கும் வேலையை ஆளுநர் செய்துள்ளார். ஆளுநர் மீது எங்களுக்கு சந்தேகமாக உள்ளது. இந்த நிலையில் நாங்கள் அடுத்து ஜனாதிபதியைச் சந்தித்துத் தானே புகார் அளிக்க வேண்டியுள்ளது என்றார்.

காங்கிரஸ் தலைவர் அனந்த் சர்மா இந்த விவகாரம் குறித்து கூறுகையில், தமிழக அரசு பெரும்பான்மையுடன் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவேதான் முதலமைச்சர் சட்ட சபையில் தனக்கு இருக்கும் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. ஆனால் ஆளுநர் ஏன் ஆட்சிக்கு முட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்று தெரியவில்லை - என்றார். (உ)

திருப்பதி ஏழுமலையானுக்குரிய 2,780 கிலோ தங்கம் வைப்பீடு!

பாரத ஸ்டேட் வங்கியில் முதலீடாக

திருப்பதி ஏழுமலையானுக்கு சொந்தமான 2,780 கிலோ தங்கத்தை தேவஸ்தான நிர்வாகம் நிரந்தர கால வைப்பு நிதியாக பாரத ஸ்டேட் வங்கியில் முதலீடு செய்துள்ளது.

திருப்பதி ஏழுமலையான் கோயில் உண்டியலில் பக்தர்கள் காணிக்கையாகச் செலுத்தும் தங்கம், நன்கொடையாக பெறப்படும் தங்கம் உள்ளிட்டவற்றை தேவஸ்தான நிர்வாகம் வங்கிகளில் குறுகிய காலத்துக்கு வைப்பீடு செய்து வருகிறது. இதற்கு வட்டியாகத் தங்கம் பெறப்பட்டு வருகிறது.

காலக்கெடு முடிந்தவுடன் முதலீடு செய்த தங்கத்தையும், வட்டியாகக் கிடைக்கும் தங்கத்தையும் சேர்த்து மீண்டும் குறுகிய காலத்துக்கு வைப்பீடு செய்து வருகிறது.

இந்நிலையில், மத்திய அரசு அறிவித்த ''கோல்ட் மானிடைஷேன்' திட்டத்துக்கு பின்னர், தேவஸ்தானம், குறுகிய கால வைப்பு நிதி அனைத்தையும் நிரந்தர கால வைப்பு நிதியாக மாற்ற முடிவுசெய்தது.

அதன்படி, இதுவரை பாரத ஸ்டேட் வங்கியில் குறுகியகால வைப்பு நிதியாக இருந்த 2,075 கிலோ தங்கத்தை 12 ஆண்டு காலத்துக்கு 2.5 சதவீத வட்டி விகிதத்தில் நிரந்தர கால வைப்பு நிதியாக மாற்றியுள்ளது. மேலும், அதனுடன் ஏழுமலையானின் பழைய நகைகளை கடந்த மே மாதம் மும்பையில் உள்ளதங்கசாலைக்கு அனுப்பி, சுத்தம் செய்த 705 கிலோ தங்கத்தையும் சேர்த்து, மொத்தம் 2,780 கிலோ தங்கத்தை 12 ஆண்டு காலத்துக்கு பாரத ஸ்டேட் வங்கியில் வைப்பீடு செய்துள்ளது.

இதற்கான பத்திரத்தை பாரத ஸ்டேட் வங்கியின் தலைமை பொதுமேலாளர் மணிபழவேசன், திருப்பதி தேவஸ்தான தலைமை அலுவலகத்தில் ஒப்படைத்தார்.

இந்தியாவின் மற்றொரு ரொக்கெட்

இந்தியத் தயாரிப்பான பி.எஸ்.எல்.வி. சி-39 ரொக்கெட் நாளை விண்ணில் செலுத்தப் படவுள்ளது. இதற்கான 29 மணி நேர 'கவுண்ட் டவுன்' இன்று தொடங்குகிறது என 'இஸ்ரோ விஞ்ஞானிகள்' தகவல் தெரிவித்தனர்.

கடல்சார் ஆராய்ச்சிக்காக ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். வரிசையிலான 7 செயற்கைக்கோள்களைவிண்வெளிக்குஅனுப்பிய இஸ்ரோ, தொடர்ந்து புதிதாக ஆயிரத்து 425 கிலோ எடை கொண்ட ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். 1-எச் என்ற செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தத் திட்டமிட்டது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து பி.எஸ்.எல்.வி. சி-39 ரொக்கெட் மூலம் நாளை இதனை விண்ணில் செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இறுதிக்கட்டப் பணியான 29 மணிநேர 'கவுண்ட்டவுன்' இன்று பகல் 1.59 மணிக்கு தொடங்குவதாகவும், தற்போது ரொக்கெட்டின் பாகங்கள் பொருத்தப்பட்டு, எரிபொருள் நிரப்பும் பணி தீவிரமாக நடந்து வருகின்றது எனவும், இஸ்ரோ விஞ்ஞானிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானுக்கு மேலாகப் பாய்ந்த வட கொரியாவின் ஏவுகணை!

கடுஞ் சீற்றத்தில் டோக்கியோ



வடகொரியா ஏவிய ஏவுகணையொன்று வடக்கு ஜப்பான் மீது பறந்து இறுதியில் கடலில் விழுந்தது.

தங்கள் பிராந்தியம் மீது பறந்த இந்த ஏவுகணையைச் சுட்டு வீழ்த்த ஜப்பான் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

உள்ளூர் நேரப்படி செவ்வாய்க்கிழமை அதிகாலையில் ஏவப்பட்ட இந்த ஏவுகணை பாதுகாப்பு எச்சரிக்கைகளைத் தூண்டியுள்ளது.

வட கொரியாவின் இந்த ஏவுகணைமுயற்சியைஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே, "முன்னெப்போதும் இல்லாத ஓர் ஆபத்து" என்றுவர்ணித்துள்ளார்.

அண்மைக்காலமாகதொடர்ச்சியாக பல ஏவுகணை முயற்சிகளை வடகொரியா மேற்கொண்ட போதிலும், ஜப்பான் பிராந்தியம் மீது பறந்த இந்த ஏவுகணை முயற்சி மிகவும் அரிதான ஒன்றாகும்.

வட கொரியாவின் எல்லை மீறிய நடவடிக்கைகளால் ஏற்கனவே பதற்றத்தில் மூழ்கிக் கிடக்கும் அப்பிரதேசத்தில் தற்போதைய ஏவுகணப் பறப்பு மேலும் பதற்றத்தை அதிகரித்திருக்கின்றது எனக் கூறப்படுகிறது.

அவசர பாதுகாப்பு ஏற்பாடுகளை முடுக்கி விடுகின்றது ஜப்பான்!

இராணுவத்துடன் பிரதமர் அவசர ஆலோசனை

டோக்கியோ, ஓக.30

ஜப்பான் வான் பிரதேசம் மீதாக வடகொரியா ஏவுகணை வீசி சோதனை செய்ததாகத் தகவல்கள் வெளிவந்துள்ளமையால் பதற்றமடைந்துள்ள ஜப்பான், தனது நாட்டைப் பாதுகாக்க மேலும் சில அவசர பாதுகாப்பு ஏற்பாடுகளை முடுக்கி விட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

அமெரிக்காவை பழிவாங்குவதற்கு முன்பே ஜப்பான் மீது வடகொரியா ஏவுகணையை ஏவ முடிவெடுத்துள்ளதால் பெரும்பரபரப்புஏற்பட்டுள்ளது.

அமெரிக்காஉட்படஉலகின் அனைத்து நாடுகளின் கடும் எதிர்ப்பையும் மீறி, வடகொரியா ஏவுகணை சோதனைகளை தொடர்ந்து நடத்தி வருகிறது. சமீபத்தில் நடத்தப்பட்ட சக்தி வாய்ந்த ஹைட்ரஜன் குண்டு சோதனையால், உலக நாடுகள் அச்சம் தெரிவித்துள்ளன.

இதனால், பொருளாதாரத் தடை உட்பட பல அதிரடி நடவடிக்கைகளை அமெரிக்காவும், ஐ.நாவும் வடகொரியா மீது எடுத்துள்ள நிலையில் கொரிய தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிக்க, அமெரிக்காவே நேரடியாகக்களம்இறங்கியுள்ளது.

இந்நிலையில்தான் வடகொரியாவில்உள்ளசுனான் பகுதியில் இருந்து ஏவுகணை ஒன்று சோதனை செய்யப்பட்டது. இந்த ஏவுகணை 1,180 கி.மீ தூரம் கடந்து சென்று பசுபிக் கடலில் விழுந்தது. ஜப்பானின் வான் பகுதியின் மீதாக இந்த ஏவுகணை சீறிச் சென்றதால், உடனடியாக பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த ஜப்பான் பிரதமர் அபே உத்தரவிட்டுள்ளார். இந்தச் சம்பவத்திற்கு கடும் கண்டனங்களைதெரிவித்துள்ள பிரதமர் அபே, இதுகுறித்து இராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து வருகிறார்.

பிளாஸ்ரிக் பை பாவனைக்கு கென்யாவில் முழு அளவில் தடை!

மீறினால் 4 ஆண்டுகள் சிறைவாசமாம்!!

கெமரூன், ஓக.30

கென்யாவில் பிளாஸ்டிரிக் பை விற்பனைக்கு விதிக்கப்பட்ட தடை நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது. அங்கு இனிமேல் பிளாஸ்ரிக் பைகளைப் பயன்படுத்தினால் 4 ஆண்டுகள் சிறை விதிக்கும் கடுமையான சட்டத்தையும் கென்யாஅமுல்படுத்தியுள்ளது.

கடலில் ஆமைகள், பறவைகள், திமிங்கிலங்கள், மீன்கள் உள்ளிட்டவை பிளாஸ்ரிக் பைகளை உட்கொள்கின்றன. இதனால் அவை அதிகளவில் உயிரிழந்து வருகின்றன.

இந்த நிலை தொடர்ந்தால் இன்னும் 50 ஆண்டுகளில் கடலில் மீன்களுக்குப் பதில் பிளாஸ்டிக் பைகளே இருக்கும் எனஆய்வுகள்எச்சரித்துள்ளன.

கென்யாவில் இறைச்சிக் காகவெட்டப்படும்பசுக்களின் வயிற்றிலிருந்து 20 பிளாஸ்ரிக் பைகள் இதுவரை எடுக்கப்பட்டுள்ளன.

இது போல் கடலுணவு மற்றும் இறைச்சிகளின் வழி மனதனின் உணவுச் சங்கிலியும் பாதிக்கப்படுவதால் 10 ஆண்டு போராட்டத்துக்குப் பின் கென்யாவில் பிளாஸ்ரிக் பைகள் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மீறினால் 4 ஆண்டுகள் சிறை அல்லது 6 லட்சம் ரூபாய் அபராதம் என்பன விதிக்கப்படும் என அந்நாடு அரசு கூறியுள்ளது.

யுத்த விமானங்களை நைஜீரியா சுவீகரிப்பதற்கு அமெ.உதவுமாம்!

நைஜீரியாவிற்கு விமானங்களைவிற்கும்விடயத்தைஅமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் அதன் நாடாளுமன்றத்திடம் தெரிவித்துள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியா போகோ ஹராம் எனும் தீவிரவாதக்குழுவின் தாக்குதல்களால் அவதிப்பட்டு வருகிறது.

இந்நாட்டிற்கு உதவும் எண்ணத்தில் 12 சூப்பர் டுகானோ ஏ-29 எனும் விமானங்களையும் 593 மில்லியன் டொலர் இராணுவ உதவியையும் வழங்க அமெரிக்கா முடிவு செய்தது.

விமானங்கள் பிரேசில் நாட்டின் எம்ப்ரேயர் நிறுவனத்தால் தயாரிக்கப்படுபவையாகும். இவை உளவு பார்த்தலுடன் தாக்குதல் நடத்தவும் ஏதுவானவையாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அமெ.டெக்ஸாயை பந்தாடியது 'ஹார்வே'

புயல் பாதிப்பை ட்ரம்ப் நேரில் பார்வை

வொஷிங்டன்.ஓக.30

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தை வார இறுதியில் தாக்கிய 'ஹார்வே' என்ற பயங்கர புயலால் அங்கு பெரும் சேதம் ஏற்பட்டது. கடந்த 13 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகவும் சக்தி வாய்ந்த இந்தப் புயலால் மணிக்கு215கி.மீ.வேகத்தில் சூறைக்காற்று வீசியது. அத்துடன் கனமழையும் கொட்டியதால் லட்சக்கணக்கானமக்கள்மிகுந்தஇன்னலுக்குள்ளாகி உள்ளனர்.வீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள் மீது மரங்கள் வேருடன் சாய்ந்து பெருத்த சேதத்தை உருவாக்கின. மின்சாரம், தகவல் தொடர்பு என்பன துண்டிக்கப்பட்டமையால் ஏராளமான பகுதிகள் இருளில் மூழ்கின. சுமார் 50 அங்குல அளவுக்கு பெய்த மழையால் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. இந்தப் புயல் மற்றும் வெள்ளத்துக்கு 5 பேர் பலியாகினர்.

அமெரிக்காவின் நான்காவது பெரிய நகரமான ஹியூஸ்டன் இன்னும் வெள்ளத்தில் மூழ்கிக் கிடப்பதாகக் கூறப்படுகின்றது.

புயல் பாதித்த பகுதிகளில் 1000 இக்கும் மேற்பட்ட தேசிய பாதுகாவலர்கள் மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த பணிகளை மாகாண அதிகாரிகளுடன் இணைந்து அமெரிக்க அரசு முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறது.

வெள்ளத்துக்குள் மோசமாகச் சிக்குண்ட நிலையில் சுமார் இரண்டாயிரம் பேர் மீட்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஹார்வே புயல் பாதித்த பகுதிகளை ஜனாதிபதி டிரம்ப் நேற்றுமுன்தினம் பார்வையிடுவதற்கு இருந்தார் என வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக இந்த புயல் மற்றும் வெள்ள பாதிப்பை பேரழிவு என பிரகடனம் செய்திருந்த ட்ரம்ப் அங்கு நிவாரண பணிகளை மேற்கொண்டு வரும் அதிகாரிகளை வெகுவாகப் பாராட்டினார்.

இலங்கைக் கிரிக்கெட் சபையை உடனடியாகவே கலையுங்கள்!

ஜனாதிபதிக்கு முன்னாள் தலைவர் அமைச்சர் ரணதுங்க கடிதம்

கொழும்பு,ஓக.30

பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ள இலங்கைக் கிரிக்கெட் துறையை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு தேவையான நிர்வாகநடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விசேட ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு இலங்கை கிரிக்கெட்அணியின்முன்னாள் தலைவரும் அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணி இந்தியாவுடன் நடைபெற்ற போட்டிகளின் போது பெரும் தோல்விகளைக் கண்டுள்ள நிலையில், அமைச்சர் அர்ஜுன ரணதுங்க ஜனாதிபதிக்குஅனுப்பியுள்ளகடிதத்தில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்குள் காணப்படுகின்ற சீர்குலைந்த நிர்வாகம் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அர்ஜுன ரணதுங்க குற்றம்சாட்டியுள்ளார்.

கிரிக்கெட் தொடர்பாக திறமை மற்றும் அனுபவம் இல்லாத நபர்கள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் உயர் பதவிகளை வகித்து வருகின்ற காரணத்தால் இந்த நிலை ஏற்பட்டதாகக் கூறியுள்ள ரணதுங்க, இலங்கை கிரிக்கெட் துறையை காக்க வேண்டுமானால் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உடனடியாக கலைக்கப்பட வேண்டுமென்று கூறியுள்ளார்.

அதன் பின்னர் கிரிக்கெட் துறையின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுபவம் கொண்ட நபர்கள் உள்ள ஆணைக்குழுவொன்று இல்லாவிட்டால் இடைக்கால நிர்வாக சபையொன்றை அமைத்து கிரிக்கெட் நிர்வாகத்தைமுன்கொண்டுசெல்லத் தேவையானநடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அர்ஜுன ரணதுங்க தனது கடிதத்தில்மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணிக்குள் புகுந்துள்ளனர் சூதாட்டக்காரர்கள் !

அதனால் இந்த நாசம் என்கிறார் ரணதுங்க

கொழும்பு, ஓக.30

உலகக்கிண்ணவெற்றியின் பின்னர் இலங்கை கிரிக்கெட் அணிக்குள் சூதாட்டக்காரர்கள் புகுந்து அணியை நாசமாக்கி விட்டார்கள் என முன்னாள் இலங்கை அணியின் தலைவரும், அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய அமைச்சில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர்இவ்வாறுகுறிப்பிட்டுள்ளார்.இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

‘‘தற்போதைய அணியின் நிலைமை குறித்துஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் தெளிவுபடுத்தி, அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரி கடந்த செவ்வாய்க்கிழமை கடிதம் ஒன்றைக்கையளித்தேன். அத்துடன் ஊடகங்களுக்கும் பிரதிகளை வழங்குவேன் என இருவரிடமும் தெரிவித்தேன்.

”இலங்கைஅணியில் பலதிறமையான வீரர்கள் இருந்தாலும், பல்வேறு பட்ட காரணங்களாலும் கிரிக்கெட் சபையின் பல அழுத்தங்களாலும் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

நான் கிரிக்கெட் சபை குறித்த கருத்துக்களை உரியவர்களுக்குத்தெரிவித்திருந்தும் அவர்கள் இது குறித்து எதுவிதநடவடிக்கைகளையும் எடுக்காத காரணத்தினாலேயே நான் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் முறையிட வேண்டியுள்ளது. - என்றார்.

இலங்கைக்கிரிக்கெட் சபையின் தற்போதைய தலைவர் மற்றோர் அரசியல்வாதியான உப சபாநாயகர் திலங்க சுமதிபால. அவரின் தந்தையார் மற்றும் குடும்பத்தவர்கள்பெயரில்குதிரை ஓட்டச் சூதாட்ட நிறுவனங்கள் பல இலங்கையில் பெரும் வருமானம் ஈட்டித் தரும் வகையில் இயங்குகின்றன.

அவருக்கு எதிராக இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் பதவிக்கான தேர்தலில்போட்டியிட்டு தோல்வியுற்றவர் அர்ஜுன ரணதுங்க என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது, இலங்கை கிரிக்கெட் அணிகளின் தொடர் தோல்விகளை அடுத்து அதனை வசமாகப் பயன்படுத்தி, திலங்க சுமதிபால தலமையிலான கிரிக்கெட் நிர்வாகத்தை ஒரு பிடி பிடிக்கிறார் அவர்.

திலங்கவின் குடும்ப ‘பிஸ்னஸ்’ குதிரையோட்டச் சூதாட்டம் என்பதால், இலங்கைக் கிரிக்கெட் நிர்வாகத்துக்குள் சூதாட்டம் புகுந்து விட்டது எனச் சீறுகிறார் அவர்.

சூதாட்டவிடயங்களுடனும், அது போன்ற வர்த்தகத்துடனும் தொடர்புடையோர் கிரிக்கெட் நிர்வாகத்தில் இருக்க முடியாது என்பது கட்டாய விதி.

ஆனால், திலங்க சுமதிபால தனது தந்தையார் பெயரில் இயங்கும் குதிரைச் சூதாட்ட நிறுவனங்களுக்கும் தனக்கும் தொடர்பேதும் இல்லை எனத் திட்டவட்டமாக அறிவித்து,அந்தவிடயத்திலிருந்து தன்னைத் தள்ளிவைத்திருப்பவர் போல காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (உ)

ஒரு வெற்றி கிட்டினால் அதிலிருந்து இலங்கை அணி ஏற்றம் பெறுமாம்!

தலைவர் கப்புகெதரவின் நம்பிக்கை இது

‘‘இலங்கைக் கிரிக்கெட்அணிக்குஇப்போது தேவை ஒரேயொரு வெற்றி. அது, கிடைத்தால் அதிலிருந்து ஏற்றம் பெற்று விடுவோம்.’’

-இவ்வாறுநம்பிக்கை வெளியிட்டுள்ளார் இலங்கைக் கிரிக்கெட் அணியின் பொறுப்புத் தலைவர் கப்புகெதர.

இந்திய கிரிக்கெட் அணி, இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரில் கண்டி பல்லேகலையில் கடந்த ஞாயிறன்று நடந்த 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியஅணி6விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி 3-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. இரு அணிகள் இடையிலான 4ஆவது ஒருநாள் போட்டி கொழும்பில் நாளை நடக்கிறது.

தோல்விக்குப் பிறகு இலங்கை அணியின் பொறுப்பு அணித் தலைவர் கப்புகெதர அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

அணிக்கு வெளியில் இருந்து எந்தப் பிரச்சினையும் இல்லை. வெற்றிச் சூட்சமத்தை நாங்கள் மறந்து விட்டோம் என்று நான் நினைக்கிறேன். பல அணிகளுக்கு இது போன்ற தோல்வி ஏற்பட்டு இருக்கின்றமயை நான் பார்த்து இருக்கிறேன். ஓர் ஆட்டத்தில் நாங்கள் வெற்றி பெற்றால் போதும். அதில் இருந்து ஏற்றம் பெற்று விடுவோம். கடந்த 2 ஆட்டங்களில் எங்களது பந்து வீச்சில் நல்ல முன் னேற்றம் ஏற்பட்டு இருக் கிறது. எங்களது துடுப்பாட்ட வீரர்கள் தங்களது ஆட்டத்தரத்தை உயர்த்த வேண்டும். நல்ல ஓட்டங்களைகுவித்தால் எங்களால் வெற்றியைச் சாதித்துக்காட்ட முடியும்.

வீரர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து அதனைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும். அப்படி செய்தால் வெற்றிபெற்றுவிடலாம். அணியில் சில பலவீனங்கள் இருக்கின்றன. அதனை அடுத்த ஆட்டத்துக்கு முன்பாக கண்டுபிடித்துக்களையத் தேவையானநடவடிக்கை எடுக்க வேண்டும். எமது அணி வீரர்கள் குறித்து மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது.

ஆனால் என்னைப் பொறுத்த மட்டில் அணியில் எந்த பிரச்சினையும் இல்லை. ஓர் அணியாக எங்களுக்குள் எந்தவித வேறுபாடும் கிடையாது. தற்போது ஒரே விஷயம் நாங்கள் சிறப்பாக செயற்பட்டு வெற்றி காணவேண்டும். உள்ளூரில் தொடர்ந்து இரண்டு ஒருநாள் போட்டித் தொடரை இழந்து இருக்கின்றமை பெரிய பின்னடைவுதான்.

அணிதேர்வுவிவாதம் குறித்து நான் அதிகம் சிந்திக்கவில்லை. வருங்காலத்தில் நாங்கள் சிறந்த அணியாக உருவெடுப்போம். - இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ச்சியாக 8 ஆவது தொடரை இந்தியாவிடம் பறிகொடுத்த இலங்கை

இலங்கைக்கு எதிராகத் தற்போது நடைபெறும் ஒரு நாள் தொடரில் 3-0 என்று முன்னிலை பெற்று தொடரைக் கைப்பற்றிய இந்திய அணி, 2 அல்லது அதற்கு மேற்பட்ட ஒருநாள் போட்டிகள் கொண்ட இருதரப்பு தொடரில் இலங் கையை தொடர்ச்சியாக 8 ஒருநாள் தொடர்களில் வீழ்த்தி சாதனை புரிந்துள்ளது.

பாகிஸ்தான் அணி மே.இ. தீவுகள் அணிக்கு எதிரான 9 இருதரப்பு தொடர்களையும் ஸிம்பாப்வே அணிக்கு எதிராக 8 ஒருநாள் தொடர்களையும் தொடர்ச்சியாக வென்று சாத னையைத் தன்வசம் வைத் துள்ளது.

தற்போது இந்தியா 8 தொடர்களை தொடர்ச்சியாக இலங்கைக்கு எதிராக் வென்றுள் ளது.

ஜஸ்பிரித் பும்ரா தற்போது ஒருநாள் போட்டிகளில் நேற்று முதல் முறையாக 5 விக் கெட்டுகளைக் கைப்பற்றினார்.

கடந்த ஆண்டு ஸிம்பாப்வே அணிக்கு எதிராக அவர் 22 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டு களை வீழ்த்தி யிருந்ததுதான் அவரது அதிகபட்சமாகும். கடந்த ஞாயிறன்று 27 ஓட்டங் களுக்கு 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றியது பும் ராவின் சிறந்த தரப் பந்து வீச்சாகும்.

4 அல்லது அதற்கும் மேற்பட்ட விக்கெட்டுகளைக் கைப்பற்றிய விதத்தில் 19 ஒருநாள் போட்டிகளில் 4 முறை பும்ரா இதனைச் சாதித் துள்ளார். மொகமது ஷமி 35 ஒருநாள் போட்டிகளில்தான் 4 முறை 4 அல்லது அதற்கும் மேற்பட்ட விக்கெட்டுகளைச் சாதித்துள்ளார்.

சதத்திற்கு முன்பாக ரோஹித் சர்மாவின் இலங்கை மைதான ரன் சராசரி 16.14. அதாவது 23 போட்டிகளில் 339 ஓட்டங்களை அவர் அங்கு எடுத்திருந்தார். நேற்று ரோஹித் சர்மா ஆட்டமிழக்காமல் எடுத்த 124 இன்னிங்ஸ் அவரது 12 ஆவது ஒருநாள் சதம் என்பதோடு இந்தியாவுக்கு வெளியே 8 ஆவது ஒருநாள் சதம் என்பதும் குறிப்பிடத் தக்கது. 2013 இல் இந்திய அணிக்கு திரும்பிய பிறகு ரோஹித் சர்மா 10 ஒரு நாள் சதங்களில் 7 முறை ஆட்ட மிழக்காமல்

திகழ்ந்துள்ளார்.

வெற்றிகரமான விரட்டல் களில் தோனியின் சராசரி 101.84 என்பது குறிப்பிடத் தக்கது. குறைந்தது 1000 ஓட்டங்கள் அடித்த வீரர்களில் வெற்றிகர விரட்டலில் அதிகச் சராசரி வைத்துள்ள ஒரே வீரர் தோனிதான். 65 வெற்றிகரமான விரட்டல்களில் தோனி 40 முறை ஆட்டமிழக்காமல் திகழ்ந்துள்ளார். கேடந்த ஞாயிறன்று தோனியின் அரைசதம் அவரது 74 ஆவது ஒருநாள் போட்டி அரைசத மாகும். சச்சின், ராகுல் திராவிட், கங்கு லிதான் தோனியை விட அதிக அரைசதங்கள் பட்டியலில் உள்ள னர்.

‘வேகப்புயல்’ மலிங்கவிடம் பாடம் படிக்கும் பும்ரா!

கொழும்பு, ஓக.30

‘‘ஒவ்வொரு போட்டியிலும் புதிதாக கற்றுக் கொள்ள வேண்டும். ‘வேகப்புயல்’ மலிங்காவிடம் இருந்து நிறைய விஷயங்கள் தெரிந்து கொண் டேன்,’’ என பும்ரா தெரி வித்தார்.

இந்திய அணி வேகப்பந்து வீச்சாளர் பும்ரா கடந்த ஆண்டு சிட்னி ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக அறிமுகம் ஆனார். இதன் பின் அணியில் நிலை யான இடத்தைப் பெற்று விட்டார். இலங்கை அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டி யில் தனது சிறப்பான பந்து வீச்சினால் 27 ஓட் டங்களுக்கு 5 விக்கெட் என்ற சாதனையைப் பதவி செய்தார்.

தவிர, கடைசி கட்ட ஓவர்களில் மட்டும் சிறப்பாக செயல்பட்டு வந்த பும்ரா, தற்போது புதிய பந்துகளில் தொடக்கத்தில் விக்கெட் வீழ்த்தத் தொடங்கியுள்ளார்.

இது குறித்து பும்ரா கூறியவை வரு மாறு :-

பொதுவாக ஒரு பந்வீச் சாளர் தொடர்ந்து புதிது புதிதாக ஏதாவது கற்றுக் கொள்ள வேண் டும். இது தான் எனது முக்கிய லட்சியம். இலங்கை மண் ணில் இதற்கு முன் விளைய வன் அல்லன். இது தான் எனது முதல் பயணம்.

இங்குள்ள சூழ்நிலை எப்படி இருக்கும் எனத் தெரியாத நிலையில், விளையாடுவது என்பது சவாலானது. இதனால் ‘சீனியர்களிடம்’ சென்று அவர்களது அனுபவத்தை கேட்கிறேன். இது தான் எனக்குள் ஏற்பட்ட மாற்றம்.

மதிப்பு மிக்கது

எனது 19 வயதில் இருந்து (2013) மும்பை அணியில் உள்ளேன். முதல் தரப் போட்டிகள் கூட விளையாடாத நிலையில், எங்கள் அணியில் இருந்த மலிங்காவிடம் (இலங்கை) இருந்து, கடந்த 3 முதல் 4 ஆண்டுகள் வரை நிறைய கற்றுக் கொண்டேன். இந்தவிஷயங்கள்விலைமதிப்பு மிக்கவை.

இந்த அனுபவங்களை வைத்து, இந்திய அணியின் வெற்றிக்குக் கைகொடுத்தமை மகிழ்ச்சி. மற்றபடி, புதிய பந்து அல்லது பழைய பந்து என எதுவாக இருந்தாலும், அணியில் வெற்றியில் பங்களிப்பு தந்தமை கூடுதல் உற்சாகம்தான்.

பயிற்சியாளருக்கு பாராட்டு

முதன் முதலில் இந்திய அணிக்காக விளையாடிய போது ரவி சாஸ்திரி, இயக் குநராகஇருந்தார். இது ரஞ்சி கோப்பை போட்டி போல நினைத்து விளையாடு இந்திய அணிக்காக... என்று எடுத்துக் கொண்டால், கூடுதல் நெருக் கடி ஏற்படும்’’ என, ‘அட்வைஸ்’ செய்தார். இப்போது வரையிலும் இப்படித் தான் எனக்கு ஆலோ சனை தருகிறார். - இவ்வாறு பும்ரா கூறினார்.

‘‘இத்தொடரில் பும்ரா 3 போட்டியில் 11 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். இப்போதைய நிலையில் ஒருநாள், ‘டுவென்டி-20’ கிரிக்கெட்டில், இந்திய அணியின் முன்னணி பந்துவீச்சாளர்களில் இவரும் ஒருவர். நீரில் நீந்தும் மீன் போல, கடைசிகட்ட ஓவர்களில் கலக்குகிறார்,’’ - என்றார்

அணித் தலைவர் கோஹ்லி இந்திய கேப்டன்

சிறப்பான ‘மேட்ச் வின் னர்கள்’ அணியில் வேண்டும் என, ஒவ்வொரு கேப்டனும் விரும்புவார். இதை அணிக்காக அடிக்கடி செய்ய வேண்டும். மற்றபடி, ஸ்பெஷல் மனிதரான தோனியுடன் இணைந்து விளையாடியது, எனக்கு ‘ஸ்பெஷல்’ இரவு தான். - என்றும் அவர் கூறினார்.

உலகச் சாம்பியனாகும்

வாய்ப்பை சிதற விட்ட சிந்து!

கதையை மாற்றிய கடைசி நிமிட ஆட்டம்

ஆட்டத்தின்கடைசிநிமிடம் எல்லாவற்றையும் மாற்றி விட்டது என இந்திய பாட்மி ண்டன்வீராங்கனைபி.வி.சிந்து தெரிவித்தார்.

ஸ்கொட்லாந்தின்கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் சிந்து 19-21, 22-20, 20-22 என்ற செட் கணக்கில் ஜப்பானின் நஜோமி ஒகுஹராவிடம் தோல்வி கண்டார்.

ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்றவரான சிந்து, நஜோமியை எளிதாக வீழ்த்தி தங்கம் வெல்வார் என எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் 3 ஆவது செட்டில் கடுமையாகப் போராடிய சிந்து நூலிழையில் வெற்றி வாய்ப்பை நழுவ விட்டார்.

இதன்பிறகு செய்தியாளர் களைச் சந்தித்த சிந்து, மேலும் கூறியவை வருமாறு :-

தங்கப் பதக்கம் வெல்ல முடியாமல் போனமை மிகுந்த வருத்தமளிக்கிறது. 3ஆவது செட்டில் 20-20 என்ற கணக் கில் சமநிலையில் இருக்கும் போது எல்லோருமே தங்கப் பதக்கம் வெல்வதற்கு தீவிரம் காட்டுவார்கள்.

நானும் தங்கம் வெல்லும் வாய்ப்பை நெருங்கியிருந்தேன். ஆனால் கடைசி நிமிடம் எல் லாவற்றையும் மாற்றிவிட்டது.

நஜோமியும் எளிதில் வீழ்த் தக்கூடிய வீராங்கனை அல்லர். நாங்கள் இருவரும் மோதுகிற போதெல்லாம் ஆட்டம் மிகுந்த சவால் மிக்கதாவே இருந்தி ருக்கிறது. நான் நஜோமியை ஒருபோதும் எளிதாக எடுத் துக்கொண்டதில்லை.

சவால் மிக்க இறுதி ஆட் டத்துக்காக நான் சிறப்பாக தயாராகியிருந்தாலும், இந்த நாள் என்னுடைய நாளாக இல்லை. இந்த ஆட்டம் ஏறக் குறைய ஒரு மணி, 49 நிமிடங் கள் நடைபெற்றது.

இதுபோன்ற ஆட்டங்கள் உடலளவிலும், மனதளவிலும் கடினமானவையாகும்.

இந்த உலக சாம்பியன்ஷிப் போட்டியில் நான் வெள்ளி வென்றிருக்கிறேன். சாய்னா வெண்கலம் வென்றிருக்கிறார். அதற்காக இந்தியர்களாகிய நாங்கள் பெருமை கொள் கிறோம். நாட்டுக்காக வெள் ளிப் பதக்கம் வென்றமையில் நான் மகிழ்ச்சியடை கிறேன். இது எனக்கு மிகப்பெரிய நம்பிக்கையைக் கொடுத் துள்ளது. எதிர்காலத்தில் உலக சாம்பியன்ஷிப் போட் டியில் ஏராளமான பதக்கங் களை வெல்வேன். - என்றார்.

காணாமலா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், குற்றம்செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்திப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசை வலியுறுத்தியுள்ள சம்பந்தன், எதிர்காலத்திலும் காணாமற் போகச் செய்தல் இடம்பெறாது என்பதை உறுதி செய்யுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

பலவந்தமாகக் காணாமல் போகச் செய்தலினால் பாதிக்கப்பட்டவர்களது சர்வதேசதினம் இன்று அனுஷ்டிக்கப்படும் நிலையில், இந்தத் தினத்தை முன்னிட்டு நேற்றுத் தாம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே சம்பந்தன் மேற்படி விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

மனக்கவலைகளோடும் துயரத்தோடும் பலவந்தமாகக் காணாமற் போகச் செய்தலினால் பாதிக்கப்பட்டவர்களது இன்னுமொரு சர்வதேச தினத்தை நாம் எதிர்கொள்கிறோம். பலவந்தமாக அல்லது சுய விருப்பத்திற்கு எதிராகக் காணாமல் போகச் செய்தலினால் பாதிக்கப்பட்டவர்கள் ஆயிரக் கணக்கானோர் இந்த நாட்டில் உள்ளனர்.

கடந்த பல வருடங்களாக காணாமற் போகச் செய்தலினால் பாதிக்கப்பட்டவர்கள் நாட்டின் பல பாகங்களிலும் – குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் – அமைதி வழியில் ஆர்ப்பாட்டங்களை நடாத்தி வந்துள்ளனர். தொடர்ந்தும் அத்தகைய ஆர்ப்பாட்டங்களைச் செய்தும் வருகின்றனர்.

அவர்கள் கோருவதெல்லாம், தங்களின் அன்புக் குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதன் உண்மைகளைக் கண்டறிய வேண்டுமென்பதே. ஆயுதக் கலவரங்கள் முடிவுக்கு வந்து ஆண்டுகள் எட்டு கடந்து விட்டபோதும் காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுடைய பிரச்சினைகள் இதுவரை திருப்திகரமான வகையில் கவனம் செலுத்தப்படாத நிலையே இருந்து வருகின்றது.

உலகின் பல்வேறு பாகங்களிலும் இது மிகமோசமான பிரச்சினையாக உருவாகி வருவதாக அங்கத்துவ நாடுகள் உணர்ந்து கொண்டதையடுத்து 2010ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை தனது தீர்மானம் ஒன்றினூடாக இப்பிரச்சினைகள் தொடர்பாகத் தனது கவனத்தைச் செலுத்தியிருந்தது.

இலங்கையில் பாதிக்கப்பட்டவர்களும் பல வருடங்களாகத் தமது அன்பானவர்கள் பற்றிய உண்மை நிலையை அறிய முடியாதவர்களாகவும் நீதி மறுக்கப்பட்டவர்களாகவும் தொடர்ந்தும் இருந்து வரும் நிலைமை கவலை தருவதாக உள்ளமை கவனிக்கத்தக்கது.

இந்தவிடயம் தொடர்பாக தனது உயர்ந்தபட்ச கவனத்தைச் செலுத்துமாறு நாம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறோம். படையினரிடம் தங்களால் கையளிக்கப்பட்டவர்களுக்கு அல்லது கடத்தப்பட்டவர் களுக்கு அல்லது காணாமல் போனவர்களுக்கு உண்மையில் என்ன நடந்தது என்பது மக்களுக்குத் தெரியவர வேண்டும். அது அவர்களது உரிமை. இந்த அடிப்படை உரிமையைக் கவனத்திற் கொள்ளாமல் விடமுடியாது.

மேலும், குற்றம் செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்திப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நாங்கள் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதோடு, இந்த நாட்டில் எதிர்காலத்திலும் இத்தகைய பலவந்தமாகக் காணாமற் போகச் செய்தல் இடம்பெறாது நிறுத்தப்படுவதையும் உறுதி செய்யுமாறும் கோருகிறோம்.

இந்தநாட்டில், பலவந்தமாக அல்லது சுய விருப்பத்திற்கு மாறாகக் காணாமற் போகச் செய்யப்பட்ட செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கும், சர்வதேச சமூகத்திற்கு அரசாங்கம் வழங்கிய உறுதிமொழிகள் செயற்படுத்தப்படுவதை உறுதி செய்யுமாறும் நாம் சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

வடமேற்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளப்பட்டுள்ளது.

கூட்டு எதிரணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய வற்றின் பிரதிநிதிகள் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

ஜெனரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேஸிலில் போர்க் குற்ற வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

ஜெனரல் ஜெகத் ஜெயசூரியா பிரேஸில் நாட்டிற்கான தூதுவராக உள்ளார். அது மட்டுமின்றி, கொலம்பியா, பெரு, ஆர்ஜென்டீனா, சிலி, மற்றும் சூரினாம் ஆகிய ஐந்து நாடுகளிலும் அவர் தூதுவராகப் பணி யாற்றுகின்றமையால் அந்த நாடுகளிலும் அவருக்கு இராஜதந்திர பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இவரது காலப் பகுதியில் சித்திரவதைக்கு உள்ளான 14 பேர் வழங்கிய சாட்சிகள் அடிப்படையில், International Truth and Justice Project (ITJP) என்ற அமைப்பு, தென் அமெரிக்காவில் உள்ள மனிதஉரிமை அமைப்பு ஒன்றின் ஊடாக, பிரேசிலில் அவருக்கு எதிராக வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

இது குறித்து இந்த வழக்கில் ஆஜரான, சட்டத்தரணி Carlos Castresana Fernandez கருத்து தெரிவிக்கையில், “இது ஒரு மறக்கப்பட்ட இனப்படுகொலை. இந்த வழக்கு ஓர் ஆரம்பம் மட்டுமே” – என்றார்.

இந்த முயற்சியில் பெரும் பங்கு வகித்த, ஐ.நா. முன்னாள் நிபுணர் ஜஸ்மின் சூகா மற்றும் முன்னாள் பி.பி.ஸி. ஊடகவியலாளரான பிரான்சிஸ் ஹரிசன் ஆகியோர், இது போன்ற வழக்குகள் சிலி, பெரு மற்றும் ஆர்ஜென்டீனா ஆகிய நாடுகளிலும் தொடரப்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே இந்த முயற்சிகளை ஒருங்கிணைத்து வரும் மனிதஉரிமைசட்டத்தரணியாகிய கீத் குலசேகரம், இந்த வழக்கு அடுத்தகட்ட நடவடிக்கைக்கு முன்னெடுத்து செல்லப்படும் எனத் தெரிவித்தார். (ம)

செங்கோலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படுகிறது.

இவரை ஒருசில உறுப்பினர்கள் பின்தொடர்ந்துள்ளனர். இதன்போது உறுப்பினர்களுக்கிடையே வாக்குவாதம் இடம்பெற்றதுடன் செங்கோலுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும் மேலும் சில உறுப்பினர்கள் இணைந்து செங்கோலை மீண்டும் சபையில் கொண்டு வந்து வைத்துள்ளனர்.

இந்நிலையில் சபை நடவடிக்கைகள் அடுத்த மாதம் 12 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்ததந்த மாகாண சபைகளில் பலத்த சர்ச்சைகளை ஏற்படுத்தி வருகின்றது.

ஊவா மாகாண சபையில் ஏற்கனவே இந்தத் திருத்தம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

மேல்மாகாண சபையில் இவ்விவகாரம்பெரும்குழப்பத்தை ஏற்படுத்தியதை அடுத்து, அது எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றமை தெரிந்ததே.

வித்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொகுப்புரையை நிகழ்த்தவிருக்கின்றனர்.

எதிர்வரும் செப்டெம்பர் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் அதற்கான திகதியை நீதிமன்றம் நிர்ணயம் செய்துள்ளது.

இருதரப்புசட்டவாதிகளினதும் தொகுப்புரைகள் அந்த இருதினங்களில் முடியுமானால் அதற்குப் பிந்திய ஒரு திகதியில் வழக்குத் தீர்ப்பை ட்ரயல் அட்–பார் மன்று வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

அஸ்கிரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று பிற்பகல்02.30 மணியளவில் வண.அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வரக்கொட சிறி ஞானரத்தின தேரர் யாழ். மாவட்டச் செயலகத்தில் சர்வமதத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். இந்தச் சந்திப்பில் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயும் கலந்து கொள்ளவுள்ளார்.

அதனைத்தொடர்ந்துபிற்பகல் 3.30மணியளவில்புத்தூரிலுள்ள பாடசாலை யொன்றில் மாணவர்களுக்கு நூல்கள் கையளிக்கும் நிகழ்விலும் அவர் கலந்து கொள்ளவுள்ளார்.

அட்டகாசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளி கூறியிருக்கின்றனர்.

இந்தத் தகவலை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கையும் வன்னிக் காட்டுக்குப் பகுதியையும் பிரிக்கும் ஆற்று நீரோட்டப் பகுதி வரை அந்த யானையின் கால்தடங்கள்காணப்படுகின்றன எனவும் நீரோட்டங்களைக் கடந்து அது பழைய இடத்துக்குத் திரும்பிவிட்டது எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த யானை தாக்கி வடமராட்சி கிழக்கில் ஒருவர் உயிரிழந்தமையுடன் மற்றிருவர் படுகாயங்களுக்கு உள்ளாகியிருந்தனர் என்பது தெரிந்ததே.

நேற்று அப்பகுதியை விட்டு வெளியேற முன்னர் வத்திராயன் பகுதியில் ஒரு வீட்டை இந்த யானை துவம்சம் செய்ததாகவும் கூறப்பட்டது.

யானை திரும்பிச் சென்று விட்டது என்று கூறப்பட்டாலும் அப்பகுதி மக்கள் மத்தியில் யானை பற்றிய பீதி தொடர்வதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ)

கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தள்ளிப் போடுவது உசிதமானது என கிழக்கு மாகாண முதலமைச்சரும்ஏனைய பிரதான கட்சிகளின் தலைவர்கள் சிலரும் கருதுகின்றனர் எனத் தெரியவந்துள்ளது. (உ)

மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு வித்தியா சிவலோகநாதன் படுகொலை வழக்கில் சாட்சிக்கூண்டிலிருந்து சாட்சியமளித்த வழக்கின் எதிரிகளுள் ஒருவரான – மகாலிங்கம் சசிகரன் (சுவிஸ் குமார்) நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

‘ட்ரயல் அட்–பார்’ நீதிமன்றத்தில் நேற்று இந்த வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்றபோது எதிரிகள் ஒவ்வொருவராக சாட்சியமளித்தனர். நேற்று சுவிஸ்குமார் தமது சாட்சியத்தில் மேலும் தெரிவித்தவற்றின் சாரம் வருமாறு:–

வித்தியா கொலைச் சம்பவம் நடைபெற்ற போது நான் கொழும்பில் இருந்தேன்.

காண்டீபன் என்ற எனது நண்பரின் உறவினரே வித்தியா. அவர் உயிரிழந்தமை குறித்து அறிந்து அவரது சாவு வீட்டுக்கு காண்டீபன் கொழும்பிலிருந்து புறப்பட்டு வந்தார். நானும் அவருடன் அங்கிருந்து வந்தேன்.

வந்த சமயத்தில்தான் என் மீது அபாண்டமாக இக்குற்றச் சாட்டு சுமத்தப்பட்டது.

புங்குடுதீவில்நின்றுமேமாதம் 17ஆம் திகதி பொலிஸ் அதிகாரிசிறிகஜன்எனதுநண்பருக்கு தொலைபேசி அழைப்பை எடுத்தார். என்னுடன் கதைக்க வேண்டும் என்று கூறினார். நான் அப்போது புளிங்கூடல் ஆலயம் ஒன்றின் தேர்த் திருவிழாவில் இருந்தேன்.

எனது நண்பர் நான் கோயிலுக்குள் என்று சிறிகஜனுக்குத் கூறினார். நான் வந்தவுடன் தன்னுடன் கதைக்குமாறு நண்பருக்கு அவர் கூறினார். நான் கோயிலால் வந்து திருப்பி அவருக்கு அழைப்பெடுத்தேன். அவர் என்னைச் சந்திக்க வேண்டும் என்று கூறினார்.

நான் அவரை எனது சகோதரர்களுடன் சந்திக்கச் சென்றேன். அங்கு வைத்து சகோதரர் உட்பட 4 பேரைக் கைது செய்தனர். நான் ஏன் கைது செய்கிறீர்கள் என்று கேட்டேன்.

அதன் பின்னர்தான் வேலணையில் எம் மீதான தாக்குதல் நடத்தப்பட்டது.

வேலணைப் பாலத்துக்கு அண்மையில் முன்னிரவில் என்னைக் கம்பத்துடன் கட்டி வைத்து பொதுமக்கள் தாக்கிய சமயத்தில் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அங்கு வந்தார். அப்போது அவர் யார் என்று கூட எனக்குத் தெரியாது. என் மீது தாக்குதல் நடத்துவதை அவர் தடுத்தார்.

‘சசீந்திரனின் அண்ணரா நீர்?’ என்று அவர் கேட்டார். அங்கு சுமார் இரு மணி நேரம் செலவிட்டு, என்னைக் காப்பாற்றி, எனது தாய் மற்றும் மனைவியிடம் என்னை ஒப்படைத்து எனது வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கு அன்றிரவு வீட்டில் எனது தாயார் மருந்து கட்டினார்.

மறுநாள் காலை சிறிகஜன் மோட்டார் சைக்கிளில் எனது வீட்டுக்குள் வந்தார். நான் வீட்டுக்குள் இருந்தேன். மனைவிதான் வெளியே சென்று அவருடன் பேசினார். அவர் என்னைச் சந்திக்க வேண்டும் என்றார்.

நான் வீட்டுக்கு வெளியே வந்தேன். “ஊர்மக்கள் உங்களை அடித்துக் கொல்லப் போகின்றார்கள். உங்களைப் 10 நிமிடத்தில் என்னால் காப்பாற்ற முடியும். அதற்கு நான் சொல்வதை நீங்கள் கேட்க வேண்டும்” – என்று சிறிகஜன் கூறினார்.

நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டேன். தமது வாகனம் வருகின்றது என்றும், தன்னுடன் வருமாறும் கூறினார். அதன்படி வாகனத்தில் ஏற்றி என்னை யாழ்ப்பாணம் கொண்டு வந்தார்.

நான், மனைவி, மனைவியின் தாய் மூவரும் வந்தோம். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்பகல் 11 மணியளவில் எங்களை விட்டார். அதன்பின்னர் பி.ப. 5 மணியளவில் அவர் வந்தார். நான் அவரிடம் நாங்கள் காலையில் இருந்து சாப்பிடவில்லை என்று கூறினேன்.

நான் மறந்து விட்டேன் என்று கூறிய அவர், மனைவியின் தாய்க்கு கண்ணுக்கு அருகே காயம் ஒன்று இருந்தது. அதற்கு முறைப்பாட்டை பதிவு செய்து விட்டு நீங்கள் போகலாம் என்று கூறினார்.

நான் முறைப்பாட்டைப் பதிவு செய்தேன். மருத்துவனையில் சேர்வதற்கான துண்டு ஒன்றையும் தந்து என்னை வெளியே விட்டார்.

அதற்கிடையில், எங்கள் படங்களை முகநூல், இணையத்தளங்களில் வெளியிட்டு விட்டார்கள். நான் அச்சத்தால் யாழ். போதனா வைத்தியசாலைக்குப் போகவில்லை. எனக்குத்தெரிந்தவான் ஒன்றின் மூலம் நான் கொழும்புக்குச் சென்றேன். அங்கு வைத்து கைது செய்தனர் – என்று தெரிவித்தார். (ம)

உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 25ஆம் திகதி பல்வேறு திருத்தங்களுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மேற்படி சட்டமூலத்தில் தாம் கையெழுத்திடுவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறு குறித்த பிரிவுக்கு சபாநாயகர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார் என்றும் –

நாளை 31 ஆம் திகதி அதில் தாம்ஒப்பமிடக்கூடியதாகஇருக்கும் என்று சபாநாயகர் கருதுகிறார் எனவும் –

அவரது அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் சட்டமூலத்தில் சபாநாயகர் ஒப்பிட்டதும் அது சட்டமாகும்.

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்து 75 முதல் 90 நாள்களுக்குள் நாடு முழுவதிலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தி முடிக்க முடியும் எனத் தேர்தல் ஆணையம் ஏற்கனவே அறிவித்திருந்தமை தெரிந்ததே.

நாளை மேற்படி சட்டமூலம் சட்டமாகி நடைமுறைக்கு வருமாயின் தேர்தல் ஆணையகக் கணக்குப்படி – 75 முதல் 100 நாள்களில் – அதாவது நவம்பர்15 இலிருந்து டிசம்பர் 10 ஆம் திகதி வரையான காலத்தில் இந்தத் தேர்தல்களை நடத்தி முடிக்க இயலும் எனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

எதிர்வரும் டிசெம்பர் 12 முதல் 21 வரை ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைகள் நடைபெறவிருப்பதனால், அதற்கு முன்னதாக டிசெம்பர் முதல் வாரத்தில் இந்தத் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் தென்படுகின்றன எனக் கூறப்பட்டது. (உ)

வடக்கிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதலமைச்சர் விக்னேஸ்வரன் அந்த யோசனைத் திட்டத்துக்கு எதிரான கருத்து நிலைப்பாட்டையே கோடி காட்டியிருக்கின்றார்.

கூட்டமைப்பின் தலைமை வேறு மாதிரித் தீர்மானித்து வழிப்படுத்தினாலன்றி வடக்கு மாகாண சபையிலும் அது தோற்கடிக்கப்படுவதற்கான சாத்தியங்களே அதிகம் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

இலங்கையில் பிரச்சினைகள் குறைந்து அமைதி; புலிகள் மீதான தடையும் பல நாடுகளிலும் நீக்கம்

மதுரையில் செய்தியாளர் மத்தியில் யோகேஸ்வரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 30

இலங்கையில் தற்சமயம் பிரச்சினைகள் எதுவுமின்றி அமைதி நிலவிவருவதால் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு விதிக்கப்பட்டிருந்த தடை பல நாடுகளில் நீக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட விஜயமாக இந்தியா சென்றுள்ள அவர், நேற்று முன்தினம் மதுரையில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியிருந்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜெயலலிதா இருந்தபோது ஈழத் தமிழர்களுக்காக சட்டப் பேரவையில் பல தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தார். அவர் தற்போது நம்மிடையே இல்லை. இந்த சூழலில் அ.தி.மு.கவைச் சேர்ந்தவர்கள் ஒற்றுமையோடு செயல்பட்டு ஈழத் தமிழர்களுக்காகத் தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டும்.

தமிழக மீனவர் பிரச்சினை நீண்ட நாள்களாக தொடர்ந்து வருகிறது. இதில் இலங்கை மற்றும் தமிழக மீனவர்கள் மட்டும் பேசினால் பிரச்சினை தீராது.

இந்தியா மற்றும் இலங்கை அரசுகள் இணைந்து பேசி முறையான எல்லையை பிரித்தால் மட்டுமே தீர்வு கிடைக்கும். தமிழக மீனவர்கள் வறுமை நிலையில் உள்ளவர்கள். எனவே, மனிதாபிமானத்தின் அடிப்படையில் மீனவர்களின் படகுகளை இலங்கை அரசு விடுவிக்க வேண்டும்.

இலங்கையில் உள்நாட்டு போரின் போது ஏராளமானோர் காணாமற் போயுள்ளார்கள். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை உத்தரவிட்ட போதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இலங்கையில் தற்சமயம் பிரச்சினைகள் எதுவுமின்றி அமைதி நிலவிவருவதால் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு விதிக்கப்பட்டிருந்த தடை பல நாடுகளில் நீக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வடக்கு மாகாணங்களில் தமிழர்களின் நிலங்களை கையகப்படுத்தி இராணுவம் அதில் முகாமிட்

டுள்ளது. இராணுவத்தை அங்கிருந்து அகற்ற பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாமுக்கு நான் செல்வதற்குத் தமிழகக் காவல்துறையினர் அனுமதிப்பதில்லை, இலங்கைக்கு அவர்கள் திரும்பும் வரை ஈழத்தமிழர்களை தமிழக அரசு அக்கறையோடு கவனித்துக் கொள்ள வேண்டும், தமிழகத்தில் உள்ள பொதுமக்களும், அரசியல் கட்சியினரும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கின்றனர்.

இந்த ஆதரவால் நாங்கள் பயன் பெற்றுள்ளோம். ஆனால் சில அரசியல் கட்சிகளும், தலைவர்களும் சுயநலத்துக்காக எங்களை பயன்படுத்துகின்றனர் என்று சீனித் தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இந்து மக்கள் கட்சியின் மதுரை மாவட்டத் தலைவர் சோலை கண்ணன் மற்றும் நிர்வாகிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

போதைப் பொருள் கடத்தல்; பாகிஸ்தான் நாட்டவர் கைது!

கொழும்பு, ஓக. 30

போதைப் பொருள் அடங்கிய பொதிகளை விழுங்கி நாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்த பாகிஸ்தான் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இந்த பாகிஸ்தானியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானின்லாகூரிலிருந்து வந்த 37 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சந்தேக நபர் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டு அதிகாரிகள் விசாரணை நடத்திய போது, இந்த நபர் போதைப் பொருள் அடங்கிய பொதிகளை விழுங்கி அவற்றை நாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்தமை அம்பலமாகியுள்ளது.

இந்த பாகிஸ்தானியர் நீர் கொழும்பு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டதையடுத்து, விழுங்கிய 21 போதைப் பொருள் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானியரின் வயிற்றில்மேலும்போதைப் பொருள் பொதிகள் காணப்படலாம் என்ற சந்தேகம் காரணமாக பொலிஸ் காவலுடன் தொடர்ந்தும் வைத்திய சாலையில்தங்கவைக்கப்பட்டுள்ளார்.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை?

கொழும்பு, ஓக. 30

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வர கூட்டு எதிரணி தீர்மானித்துள்ளது.

கூட்டு எதிரணியை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக வக்கும்புரே கொழும்பு ஊடக மொன்றுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்து விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் விசாரணைகளின் ஊடாக வெளியாகும் தகவல்களின் அடிப்படையில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட உள்ளது.

பிணைமுறி மோசடிகள் இடம்பெற்றபோது மத்திய வங்கி பிரதமரின் கீழ் இயங்கி வந்தது.

எனவே, இந்த மோசடிகள் பிரதமருக்கு தெரிந்தே இடம்பெற்றிருக்க வேண்டும் என்பது எவராலும் ஊகிக்கக் கூடியதொன்றாகும்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டதனைப் போன்றே, பிரதமருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர பின்னணி உருவாக்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் இரண்டு மாதங்களில் பிரதமருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் என ஜனக வக்கும் புரே குறிப்பிட்டுள்ளார்.

பொல்கஹவெல அமைப்பாளராக அநுராத சம்பத்!

கொழும்பு, ஓக. 30

குருநாகல் மாவட்டம் பொல் கஹவல தொகுதியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளராக அநுராத சம்பத் ஹேவகே நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன் தினம் முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து தனது நியமனக் கடிதத்தை அவர் பெற்றுக் கொண்டுள்ளார்.

(க)

இருபதாம் திருத்தச் சட்டத்திற்கு எதிராக 7 மனுக்களை தாக்கல் செய்துள்ளது எதிரணி!

கொழும்பு, ஓக. 30

20 ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிராக கூட்டு எதிரணி 7 மனுக்களை தாக்கல் செய்துள்ளது.

உயர் நீதிமன்றில் இந்த ஏழு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழப் பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பு சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டுஎதிரணியை பிரதிநிதித்துவம் செய்யும் இரண்டு கட்சிகளி னால் உயர் நீதிமன்றில் 20ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிராக மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

20ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிராக தாமும்மனுவொன்றை தாக்கல் செய்துள் ளார் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், பவ்ரல் அமைப்பு மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் ஆகியனவும் 20ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுக்களை தாக்கல் செய்துள்ளன.

(க)

மலையகத்தில் சீரற்ற காலநிலையால் பெருந்தோட்ட தொழிற்துறை பாதிப்பு!

கொழும்பு, ஓக. 30

மலையகத்தில் தொடரும் சீரற்ற காலநிலையால் பெருந்தோட்ட தொழில்துறை பெரிதும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளது என தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நேற்று காலை முதல் அடைமழையுடன் பனிமூட்டம் நிறைந்து காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காசல்ரீ, மவுசாக்கலை, கெனியன், விமலசுரேந்திர மற்றும் மேல் கொத்மலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது.

இந்த நிலையில் ஹட்டன், மஸ்கெலியா, நோட்டன், நுவரெலியா மற்றும் கொழும்பு வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகளை அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



மாணவரின் மரணம் வேதனையானது இனி இவ்வாறு நடைபெறக்கூடாது

வடக்கு கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஓக.30

மாணவர்கள் அறுவர் மண்டைதீவுக்கடலில் பலியான சம்பவம் தொடர்பாக வேதனை வெளியிட்டுள்ள வடக்கு மாகாணக் கல்விஅமைச்சர்க.சர்வேஸ்வரன், எதிர்காலத்தில் இத்தகைய இழப்புக்கள் நடைபெறாவண்ணம்பெற்றோர்தமதுபிள்ளைகளைப் பொறுப்புணர்வுடனும், எச்சரிக்கையுடனும்வளர்க்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், பாதுகாப்பற்ற இத்தகைய நடவடிக்கைகளில் எவரும் ஈடுபட வேண்டாம் என்றும் இளைஞர்களை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அதிகரித்து வரும் வீதி விபத்துக்கள், ரயில்கடவை விபத்துக்களைத்தடுப்பதற்கான அல்லது குறைப்பதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில் பாதுகாப்பற்ற படகுப் பயணத்தின் மூலம் ஆறு மாணவர்களை நாம் இழந்துள்ளமை என்பது மேலும் வேதனையைத் தருகின்றது.

எமது சமுதாயம் மக்கள் தொகையில் வீழ்ச்சி அடைந்து வரும் வேளையில், நாம் கல்வித்தரத்தை மேம்படுத்தி, எமதுபலத்தை அதிகரிக்க வேண்டிய நிலையில் உள்ளோம், அதனை நோக்கியே எமது திட்டங்களும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வேளையில், கல்வியில் உயர் தரத்தில் உள்ள, சமூகத்திற்குப் பலம் சேர்க்க வேண்டிய இந்தஆறுமாணவர்களின் இழப்பும் ஜீரணிக்க முடியாததாகும்.

இந்த உயிரிழப்புக்கள் அவர்கள் சார்ந்த குடும்பங்களுக்கு மட்டுமன்றி தமிழ் சமூகத்திற்கும் பேரிழப்பாகும். இளைஞர்கள் மத்தியில் அதிகரித்து வரும் அலட்சிய மனோபாவமும் இவ்வாறான இழப்புக்களுக்கு ஒரு காரணமாகும்.

எதிர்காலத்தில் இத்தகைய இழப்புக்கள் எதுவும் நடைபெறா வண்ணம் பெற்றோர், பொறுப்புணர்வுடனும், எச்சரிக்கையுடனும் வழிகாட்டி வளர்க்க வேண்டும்என்றபணிவான வேண்டு கோளை இவ் வேளையில் விடுப்பதுடன் பாதுகாப்பற்ற இத்தகைய நிகழ்வுகளில் எவரும் ஈடுபட வேண்டாம் என்றும் இளைஞர்களைத்தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தமது பிள்ளைகளின் இன்னுயிர்களை இழந்து வாடும் பெற்றோர்கள் மற்றும் குடும்பத்தினருக்கும், நல்ல மாணவர்களை, நண்பர்களை இழந்து வாடும் பாடசாலைச் சமூகத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவை போன்ற துயரமான சம்பவங்கள் இனி மேலும்நிகழாதிருக்க மாணவர்கள்அனைவரும்விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்,

குறித்த ஆறு இளைஞர்களினதும் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன். - எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)

அஸ்வர் காலமானார்

முன்னாள் அமைச்சரான ஏ.எச்.எம்.அஸ்வர், காலமானார். சிறிதுகாலம் நோய்வாய்பட்டிருந்தஅவர், கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையிலேயே நேற்றுக் காலமானார். இறக்கும் போது அவருக்குவயது 80ஆகும்.

அன்னாரின் ஜனாஸா, தெஹிவளை முஸ்லிம் மையவாடியில், இன்று நல்லடக்கம் செய்யப்படும் என குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

அவர், நாடாளுமன்றத்துக்கு முதலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஊடாகவும் தேசியப் பட்டியல் மூலம் தெரிவுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



மூலிகை மரக்குற்றியில் 'மக்' தயாரித்துக் கடத்த முயற்சி!

கட்டுநாயக்காவில் இரு சீனர்கள் சிக்கினர்

ஆயுள்வேத மூலிகை மரம் ஒன்றில் செய்யப்பட்ட 65 'மக்' (கோப்பைகளை) தம்முடன் கொண்டு செல்ல முற்பட்ட இரண்டு சீனப் பிரஜைகளை பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வைத்து அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டனர்.

நீரிழிவுநோய்க்காகப்பயன்படுத்தப்படும் இந்த மரக் குற்றிகளில் தயாரிக்கப்பட்ட - சுமார் 7 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய -40 கிலோகிராம் நிறையுடைய - பொருள்களை இவர்கள் கடத்திச் செல்ல முற்பட்டனர் எனக் கூறப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலை 4.15 மணியளவில் UL 838 என்ற விமானம் மூலம் சீனா நோக்கி செல்லவிருந்த நிலையில் இவர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்ட பின்னர் இருவரும் விடுவிக்கப்பட்டனர் என சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

சீன நாட்டுப் பிரஜைகள் இருவரும் 30 மற்றும் 32 வயதுடையவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளுக்கு பட்டமளிப்பு விழா

தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகம் வழங்கியுள்ள கௌரவ "டாக்டர்" பட்டம் வழங்கும் விழா

இடம் : சந்நிதியான் ஆச்சிரமம்
காலம் : 01.09.2017 வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 9 மணி

நிகழ்ச்சி நிரல்

பஞ்சபுராணம் ஓதுதல்

ஆசியுரை : நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

வரவேற்புரை : திரு. செ.பரமேஸ்வரன் (அதிபர்)

அறிமுகவுரை : திருமதி சசிலேகா ஜெயராஜன் (ஆசிரியை)

தலைமையுரை : திரு. நா.யோகராஜா (பணிப்பாளர், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம், தலைமைச் செயலகம், கொழும்பு)

சிறப்புரையும் விருது வழங்கலும் : பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன் (துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
பேராசிரியர் கந்தையா தேவராசா (முகாமைத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

ஏற்புரை : ஆச்சிரம சுவாமிகள்

நன்றியுரை : இரா.செல்வவடிவேல் (ஆசிரியர்)

குறிப்பு : செல்வச் சந்நிதியில் நடைபெறும் விசேட பூசை வழிபாடுகளுடன் விருந்தினர் அனைவரும் ஆச்சிரமத்துக்கு அழைத்து வரப்படுவர்.
"அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்"

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

சந்நிதியான் ஆச்சிரம அன்பர்கள்.

மரண அறிவித்தல்

தோற்றம் 29 - 08 - 1927

மறைவு 29 - 08 - 2017

வைத்தியகலாநிதி செல்வி புஸ்பம் சண்முகம்

(ஓய்வுபெற்ற பணிப்பாளர், யாழ்.போதனா வைத்தியசாலை)

முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி புஸ்பம் சண்முகம் தனது 90 ஆவது வயதில் நல்லூரான் திருவடியை அடைந்தார். அன்னார் காலம் சென்றவர்களான சண்முகம் முதலியார் அழகம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற புனிதவதி (Dr.செல்லையா), காலஞ்சென்ற நகுலேஸ்வரி (பொறியியலாளர் கனகசிங்கம்) ஆகியோரின் சகோதரியும், ஜெகதாம்பிகை (சிவபாலசுந்தரம்), ஜெகதீஸ்வரன் (அம்பிகை), ஜெயராஜா (பவானி), புஸ்பராஜா (ஈஸ்வரி), விக்னராஜா (பங்கஜவதனி), திவ்வியநேசன் (விஜயகுமாரி), ஜெயநாதன் (சூரியகுமாரி), ரஜினி (விஜயலிங்கம்), சிவாநந்தன் (யோகர்), பவானந்தன் (லோகேந்தினி), காலம்சென்ற சதாநந்தன் மற்றும் நித்தியானந்தன் (தர்ஷினி), பாஸ்கரதேவன் (பாலசாந்தினி), அமரதேவன் (தேவகுமாரி) - கொழும்பு, கலாவதி (மோகனசுந்திரம் - ஓய்வூதியர், யாழ். மாநகர சபை), வசந்தகுமார் - (ஓய்வூதியர், யாழ். மாநகர சபை (நந்தினி) ஆகியோரின் சிறிய தாயும், பிரணவன் (கொழும்பு), பவஹரிணி (கொழும்பு), திவ்யபாரதி (றுகுணு பல்கலைக்கழகம் - மருந்தகவியல்), ஷந்தனா (யாழ். மருத்துவபீடம் மாணவி 3 ஆம் வருடம்), ஹம்சானந்த் (யாழ்.இந்துக் கல்லூரி A\L 2019) ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

465/24 பருத்தித்துறை வீதி,
(மனோன்மணி அம்மன் கோவில்அருகாமை)
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: வசந்தன்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.